விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 26
ஒலி 299 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை (14.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்நாடு, வெளிநாடுகளுக்கான
தபால்கள், பொதிகள் சேவை
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1250/= Australia - 2050/=
France - 1930/= Canada - 2470/=
Germany - 1930/= தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மல்லாவி
(5653)

### யாழ்.செம்மணியில்
## மோ.சைக்கிள், ஆட்டோ, பஸ் ஒன்றோடொன்று மோதி விபத்து
### உதைபந்தாட்ட நடுவரான இளைஞன் பலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் மோட்டார் சைக்கிள், ஆட்டோ மற்றும் பஸ் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் பங்களிப்புடன் தையிட்டி திஸ்ஸ விகாரையில் விழா
### எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தையிட்டி திஸ்ஸ விகாரையில் பொலிஸாரின் முழுமையான பங்களிப்புடன் விழா வொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

16ஆம் பக்கம் பார்க்க



# செம்மணி அகழ்வுக்கு ரூ.19 மில்லியன் நிதி விடுவிப்பு



- மழையால் அகழ்வுப் பணி தாமதம்.
- நவம்பர் 3ஆம் திகதி வழக்கு ஒத்திவைப்பு.

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுக்கு 19 மில்லியன் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் மழையால் அகழ்வை மேற்கொள்வது தாமதமாகியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### சண்டிலிப்பாய் வடக்கில்
## இனந்தெரியாத குழு வீடு புகுந்து அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வடக்கில் முகமூடி அணிந்து கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத குழு ஒன்று வீடுபுகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை

15ஆம் பக்கம் பார்க்க

### யாழில் பல்வேறு
## குற்றச் செயல்களில் ஈடுபட்ட 14 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 14 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று நாட்களில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக யாழ்.

15ஆம் பக்கம் பார்க்க

### பளை இத்தாவிலில்
## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பளை)

பளை - இத்தாவில் பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டிச் சாரதியான குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (13) பிற்பகல் 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் பளை - வண்ணாங்கேணி

15ஆம் பக்கம் பார்க்க

### மைத்திரியிடம்
## 5 மணி நேரம் விசாரணை

(கொழும்பு)

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் 5 மணி நேரம் விசாரணை செய்துள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டியில் சடலமாக மீட்கப்பட்ட பெண் கொலை
### மருத்துவ அறிக்கையில் உறுதி பெண்ணும் இனங்காணப்பட்டார்

(பூநகரி)



சங்குப்பிட்டியில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் இனங்காணப்பட்டுள்ளதோடு குறித்த பெண் படுகொலை செய்யப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனையில் உறு

15ஆம் பக்கம் பார்க்க

## தருமபுரத்தில் கைக்குண்டு அடையாளம்

(கிளிநொச்சி)

தருமபுரத்தில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

தருமபுரம் பகுதியில் தனியார் காணி ஒன்றில்

16ஆம் பக்கம் பார்க்க

### இடமாற்றம் வழங்குக
## வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை ஆசிரியர் சங்கம் கவனயீர்ப்புப் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களின் சமத்துவம் முன்னேற்றத்தில் இலங்கை உறுதியாக உள்ளது - பிரதமர்

(பீஜிங்)

பெண்களின் உரிமைகள் மற்றும் சமத்துவத்தை முன்னேற்றுவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சீனாவின் பீஜிங்கில் நேற்று நடைபெற்ற பெண்கள் பற்றிய உலகத் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் குறிப்பிட்ட அவர்,


1995 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகப் பெண்கள் மாநாட்டிலிருந்து இதுவரை பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள போதிலும் பெண் பணியாளர் பங்கேற்பு 48.7 சதவீதமாக மட்டுமே காணப்படுகின்றமை உள்ளிட்ட முக்கிய குறைபாடுகள் தற்போதும் நிலவுகிறது.

பெண் கல்வியறிவு அதிகரித்துள்ளதாகவும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பட்டம் பெற்றவர்களில் பெண்கள் சுமார் 35 சதவீதம் மட்டுமே உள்ளனர்.


உலகளாவிய ரீதியில் பெண்களின் ஆயுட்காலம் 1995 இல் 69 ஆண்டுகளிலிருந்து, 2023 இல் 76 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது

எனினும் ஆண்களை விட சுமார் 4 கோடியே 78 இலட்சம் பெண்கள் மிதமான அல்லது கடுமையான உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டினார்

அதனால் பெண்களின் அனைத்துத் துறையிலான மேம்பாடு என்பது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், சமூகம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றில் பரவியுள்ள ஒரு முழுமையான செயல்முறையாகும் என்பதை சுட்டிக்காட்டிய பிரதமர் இதற்கு தொடர்ச்சியான அர்ப்பணிப்பு தேவை என்றும் வலியுறுத்தியுள்ளார். (ம-7)



மண்ணுக்காகத் தம்மை அர்ப்பணித்த மாலதி படையணியின் சிறப்புத்தளபதி பிரிகேடியர் விதுசா மற்றும் மாவீரன் விதுசான் ஆகியோரின் தந்தை கணபதிப்பிள்ளை கந்தையா (கப்பூது ஐயா) அவர்களின் இறுதிச்சடங்கு நேற்று கரவெட்டியில் நடைபெற்றது.



இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஸ் ஜாவுக்கும் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது இருநாட்டின் சமகால அரசியல் நிலவரங்கள் குறித்து ஆழமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

# மாகாண சபைத் தேர்தலை இனியும் தவிர்க்க முடியாது

## ஐ.ம.சக்தி இடித்துரைப்பு

இனியும் அரசாங்கத்தால் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தாம் விருப்பத்துடனேயே மாகாணசபைத் தேர்தலை நடத்துவதாகக் காண்பிப்பார்கள்.

மாகாணசபைத் தேர்தலும் நடத்தப்பட வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைத்துள்ள முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும்.

இனியும் இவர்களால் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முடியாது.


எனவே தேர்தலுக்கு முன்னர் அழகிய வசனங்களால் ஆன வரவு - செலவு திட்டத்தை நவம்பரில் முன்வைப்பார்கள். ஒன்றை மறைத்து மற்றொன்றைக் காண்பிக்கும் வரவு - செலவுத் திட்டத்தை பார்க்கக் கூடியதாக இருக்கும் .

மக்கள் வழங்கிய ஆணைக்கமைய இந்த வரவு - செலவு திட்டம் அமையுமா? என அரசாங்கமே பதில் வழங்க வேண்டும் என்றார். (ம-7)


# மரண அறிவித்தல்

மண்ணில்

15 - 06 - 1946



விண்ணில்

13 - 10 - 2025

## திருமதி தவநாயகி தங்கராசா

வாதரவத்தை, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவநாயகி தங்கராசா அவர்கள் (13.10.2025) நேற்றுத் திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னப்பு - தங்கராசாவின் அன்பு மனைவியும் மனோன்மணியின் அன்புச் சகோதரியும் சத்தியலீலா, கோபாலகிருஷ்ணன் (பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை), அமரர் வைகுந்தநாதன் மற்றும் சத்தியமாலா, அமரர் காண்டீபநாதன் மற்றும் கோகிலவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஈஸ்வரன், கோமதி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிராந்திய சுகாதார அலுவலகம், யாழ்ப்பாணம்), மாயராசா, சிவன்சுதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபேதா, முகுந்தன், சுஜீபா, சுமித்திரா, தமிழினி, நர்த்தகி, பவித்திரன், நித்தியா, விகர்ணன், பிருத்திகா, பிரணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டஷ்னவியின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (14.10.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் கோப்பாய் தெற்கு - இராசவீதி (பாலா மாஸ்ரர் கடை முன்பாக) முகவரியில் உள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் வாதரவத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இராச வீதி, கோப்பாய் தெற்கு. (C-4104)

077 127 6078
077 749 5205

தகவல்: த.கோபாலகிருஷ்ணன் (மகன்)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127



கல்யாணி நகை மாளிகை

வங்கியில் அடைவு வைத்த தங்க நகைகளை மீட்டு மிகுதிப் பணம் வழங்கப்படும்.

(5651)

077 784 0379

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


# கொழும்பில் இருவர் கைது

கொழும்பு மருதானையில் முச்சக்கரவண்டியில் கஞ்சா, ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கையானது வட்டவளை பொலிஸாரால் நேற்று (13) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

25 மற்றும் 27 வயதுடைய வெலிமடை பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7)


48வது பிறந்த தின நினைவலைகள்

மருத்துவர் வினோதரன் (அஜந்தன்)

14.10.2025

மண்ணில் இன்று மறைந்து
எங்கள் மனதில் நிறைந்து
விண்ணில் உறைந்த
எங்கள் கண்ணின் மணியே!
நீ எம்மை பிரிந்து
விண்ணை அடைந்தாலும்
என்றென்றும் எங்கள்
நினைவில் வாழ்வாய்...





என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்:-
அன்புத் தாய் பாலசுந்தரம்,
மனைவி அ.கருணாதேவி,
மகன் அ.அருளகன்,
தங்கை ஆஷா குடும்பத்தினர்

(5650)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கும் இணையவழி நிதி மோசடிகள்!

## கணனி அவசர தயார்நிலைக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

**இணையத்தில் வேகமாக அதிகரித்து வரும் நிதி மோசடி நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை கணனி அவசர தயார்நிலை குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

நிதி மோசடிகள் குறித்து கிடைக்கப்பெறும் பெரும்பாலான முறைப்பாடுகள் வெளிநாட்டு பங்குச் சந்தைகளில் அதிக இலாபம் கிடைக்கும் எனக் கூறி மக்களை ஏமாற்றும் நிதி மோசடிகள் என கணனி அவசர தயார்நிலை குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சாருக்க தமுனு பொல தெரிவித்தார்.

இந்த நிதி மோசடிகள் மூலம் 10 இலட்சம் முதல் 3 கோடி ரூபாய் வரையில் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் அளித்த முறைப்பாடுகளில் தெரியவந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும், இவ்வகையான இணைய நிதி மோசடிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ள தேசிய அடையாள அட்டை விபரங்கள், வங்கி விபரங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்களை இணையத்தில் பகிர்வதை தவிர்க்குமாறு பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



# வெளிநாட்டு பணவனுப்பல் செப்ரெம்பரில் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் வெளிநாட்டு தொழிலாளர்கள் மூலம் 695.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவிலான வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட சமீபத்திய அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் இந்த காலப்பகுதியில் பெறப்பட்ட வெளிநாட்டு பணப்பரிமாற்றங்களின் அளவு 555.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தை கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 140.1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமாக வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் பெறப்பட்டுள்ளன.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் இதுவரை வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் மூலம் இலங்கைக்கு பெறப்பட்ட வருமானம் 5,811.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

# லஞ்ச் சீற் பாவனை முற்றாகத் தடை

(கொழும்பு)

எதிர்காலத்தில் லஞ்ச் சீற் பாவனை முற்றாகத் தடை செய்யப்படும் என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் திலக் ஹேவாவசம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, மாற்றாக பிளாஸ்ரிக் அல்லாத லஞ்ச் சீற்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நவம்பர் 1 முதல் பொலித்தீன் பைகளை இலவசமாக வழங்க முடியாது என நுகர்வோர் விவகார அதிகார சபை அண்மையில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

இலவசமாக வழங்கப்படாத பொலித்தீன் கொள்கலன் பைகளுக்கு நுகர்வோரிடமிருந்து வசூலிக்கப்படும் தொகையைப் பற்றுச்சீட்டில் குறிப்பிட வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அடர்த்தியான பொலித்தீன் பைகள் மற்றும் அடர்த்தி குறைந்த பொலித்தீன் பைகள் ஆகியவற்றிற்கான விலைகளும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வட மாகாணத்தில் லஞ்ச் சீற்றிற்கு பதிலாக வாழை இலைகளைப் பயன்படுத்துவதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரிசிக்கு பற்றாக்குறையை ஏற்படுத்த சிலர் முயற்சி

(கொழும்பு)

அரிசி விலையை அதிகரிக்கும் நோக்கில், அரிசிக்குச் செயற்கை பற்றாக்குறையை ஏற்படுத்தச் சிலர் முயற்சிப்பதாக விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர். தேசிய விவசாயிகள் ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராத தென்னகோன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு, அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படும் என வெளியான வதந்திகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அரசாங்கம் நிர்ணயித்த விலையை விட அதிக விலைக்கு நெல் கொள்வனவு செய்த உரிமையாளர்களே, அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த நிலையில், அரிசிக்கான பற்றாக்குறை ஏற்படுத்துவதற்கான எந்த காரணமும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பயணச்சீட்டை வழங்க மறுத்த பேருந்து நடத்துநர்கள்

## 57 பேர் பணியிலிருந்து இடைநீக்கம்

(கொழும்பு)

பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்கு பய்ணச்சீட்டு வழங்காத குற்றச்சாட்டின் கீழ் மேல் மாகாணத்தில் 57 பேருந்து நடத்துனர்கள் தற்காலிகமாக பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த விடயத்தை மேற்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து ஆணையத்தின் தலைவர் காமினி ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, இம்மாதம் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் குறித்த நடத்துநர்கள் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதாக ஆணையத்தின் தலைவர் காமினி ஜாசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இடைநீக்கம் செய்யப்பட்ட நடத்துநர்களுக்கு மேற்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து ஆணையம் ஒரு நாள் பயிற்சி பட்டறையையும் நடத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் இம்மாதம் முதலாம் திகதி முதல் தங்களுக்கான பயணச்சீட்டுக்களை பெற்றுக் கொள்வது கட்டாயமாக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த கால கட்டத்தில், மேற்கு மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து ஆணையம் கிட்டத்தட்ட 500 பேருந்துகளை ஆய்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கலக்கத்தில் ஊழல்வாதிகள்

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

(கொழும்பு)

சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகளை ஊழல் பற்றிய ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் முன்னெடுப்பதால் ஊழல் வாதிகள் கலக்கமடைந்துள்ளதாகப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அரச நிதியை மோசடி செய்தவர்கள் நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷர்கள் உட்பட கடந்த கால ஊழல்வாதிகளின் ஊழல் மோசடிகள் வெளிவரும் போது பல ஊழல்வாதிகள் அச்சமடைந்துள்ளனர்.

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக கையூட்டல் ஆணைக்குழு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

இதன் காரணமாகவே, ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மீது, பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ரக்பி வீரர் தாஜுதீனின் படுகொலை தொடர்பில் புதிய விடயங்கள் வெளியாகும் போது நாமல் ராஜபக்ஷ அச்சமடைந்து பொலிஸ் திணைக்களத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்.

பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் எதிர்க்கட்சியினர் மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை ஏற்படுத்துவதாகவும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.



சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவை அரசியல் மயப்படுத்த வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு கிடையாது.

ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைவாகவே ஒரு சில அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளதால் பொலிஸ் ஆணைக் குழுவின் சுயாதீனத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசியமட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டத்தில் வரலாறு படைத்த யாழ். மாவட்ட அணியினர்



தேசிய மட்ட உதைபந்தாட்ட போட்டியில் வரலாற்றில் முதன் முறையாக யாழ் மாவட்ட பெண்கள் அணியினர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

35ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் உதைபந்தாட்டபோட்டிகள் பதுளையில் நடைபெற்றது இதில் யாழ் மாவட்ட பெண்கள் அணி காலிறுதியில் அநுராதபுர மாவட்ட அணியையும் அரையிறுதியில் களுத்துறை மாவட்ட அணியினையும் வெற்றி கொண்டு இறுதி போட்டியில் பல தேசிய வீரர்களை உள்ளடக்கிய குருணாகல் மாவட்ட அணியினை வெற்றிபெற்று சரித்திரம் படைத்தது.

யாழ் மாவட்டம் சார்பாக தெல்லிப்பழை பிரதேச வீரர்கள் அதிகளவு இடம்பெற்றனர்.

இவர்களில் மகாஜனகல்லூரியின் 14வீராங்கனைகளும் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியின் இரு வீராங்கனைகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## குண்டு எறிதலில் சுண்டுக்குளி மாணவிக்கு தேசியத்தில் வெண்கலம்



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட குண்டு போடுதலில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி அ.ஆயிலை வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.


அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு தியகம ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 14 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி அ.ஆயிலை 10.04 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார். (3)

## தேசியமட்ட கோலூன்றிப் பாய்தலில் யாழ். மாணவிகள் சாதனை



பி. சன்முகப்பிரியா



எஸ். சகானா



கு. வைஷ்ணவி

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 38 ஆவது தடகளப் போட்டிகள் கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்றுவருகிறது.

இப் போட்டியில் கோலூன்றிப் பாய்தலில் யாழ். மாணவிகள் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளனர்.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மாணவியான பி.சண்முகப்பிரியா 2.60 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் 18 வயது பெண்கள் பிரிவினருக்கான போட்டியில் யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரி மாணவியான கு.வைஷ்ணவி மற்றும் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி மாணவியான எஸ்.சகானா ஆகியோர் 2.60 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடங்களைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர். (3)

## மகளிர் உலகக்கிண்ணம்

## வரலாற்று வெற்றியை பதிவு செய்த அவுஸ்திரேலிய மகளிர் அணி

மகளிர் உலகக்கிண்ணத் தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய மகளிர் அணி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய மகளிர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 330 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இந்திய மகளிர் அணி சார்பில் ஸ்மிருதி மந்தனா 80 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய மகளிர் அணியின் அன்னபெல் சதர்லேண்ட் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.




இந்நிலையில் 331 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய மகளிர் அணி 49 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய மகளிர் அணியின் சார்பில் அணித் தலைவி அலிசா ஹீலி 142 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதற்கமைய மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் சேஸ் செய்யப்பட்ட அதிகபட்ச இலக்கு இதுவாகும்.

முன்னதாக கடந்த 2024 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க மகளிர் அணிக்கெதிரான போட்டியில் இலங்கை மகளிர் அணி 302 ஓட்டங்களை வெற்றிகரமாக சேஸிங் செய்ததே சாதனையாக இருந்தது. குறித்த சாதனையை தற்போது அவுஸ்திரேலிய மகளிர் அணி முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக்கு வழிவகுக்கும் கிரிப்ரோ கரன்சி

**இணைய வர்த்தகத்தில் ஏற்பட்ட நிதியிழப்புக் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் சுகாதார முகாமைத்துவ உத்தியோகத்தராக பணியாற்றிய இளம் குடும்பஸ்தர் அண்மையில் விபரீத முடிவெடுத்து உயிரிழந்த நிலையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

தற்போது ஒன்லைன் crepto currency (கிரிப்ரோகரன்சி) மூலம் பணம் பார்க்கலாம் என்ற மாயதோற்றம் பலரால் பகிரப்படுகிறது. பலருக்கு crepto currency என்பது தெரியாமல் கூட இருக்கலாம். அதில் பிரபலமான ஒன்றுதான் நீங்கள் பரவலாக அறிந்த Bitcoin என்ற cripto currency ஆகும். அதுபோன்று பல crepto currency கள் இன்று காணப்படுகின்றன.

உண்மையிலேயே இந்த கண்



ணுக்கு தெரியாத கிரிப்ரோகரன்சிகளை வாங்கி விற்பதன் மூலம் லாபமும் பார்க்கலாம். ஆனால் அதில் வல்லமையும் பாண்டித்தியமும் பெற்றிருக்க வேண்டும்.

இல்லையென்றால் போட்ட பணம் மாயமாகிவிடும். அதைவிட உங்களால் சுயமாக கற்று அந்த கரன்சிகளை கையாள முடியும் என்றால்தான் அதில் ஈடுபட வேண்டுமே ஒழிய இன்னொருவரின் ஆசை வார்த்தையினை நம்பி அவர்மூலமாக கரன்சிகளை வாங்கி அவரே உங்கள் முகவராக, கரன்சிகளை கையாள ஒரு போதும் முயலாதீர்கள். அது மிக மிக ஆபத்தானது.

சுயமாக crepto currency களை ஒன்லைன் செயலிகளினால் கையாளுதல் என்பதே மிக இடியப்ப சிக்கலான ஒன்று. அப்படி இருக்கையில் இன்னொருவர் மூலம் வாங்குதல் விற்றலினை ஒருபோதும் செய்யவே செய்யாதீர்கள்.

Bitcoin என்ற கரன்சி வந்த முதல் மிக குறைவான டொலர் பெறுமதியிலேயே இருந்தது. ஆனால் அந்த ஒரு கொயின் விலை இன்று பல மடங்கு டொலர்களாகும்.

Bitcoin 2009 இல் வெளியிடப்பட்டபோது ஒரு கொயின் வெறும் $1 ( 302 ரூபா) பெறுமதியடைந்தது. ஆனால் இன்று ஒரு கொயின் $155,008 (இலங்கை ரூபாவில் 46, 812, 416.00 அதாவது சுமார் 4 கோடியே 68 லட்சம்)

அதைப்போல இன்று புதிய புதிய எண்ணுக்கணக்கற்ற crepto currencyகள் புழக்கத்தில் உள்ளன. ஒன்றை வாங்கினால் அதற்கான சுட்டிகள் அதிகரித்து உங்கள் இருப்பை அதிகரிக்கும். குறிப்பிட்ட crepto currency யை வாங்கி விட்டு ஒரு வருடம் நிலையாக பூட்டி வைக்கலாம். அதற்கான வட்டி வீதம் மிக கூட, 90 நாட்கள், மாதம், கிழமை என பூட்டி வைத்து கொண்டு அதற்கான பணத்தினை நீங்கள் நேரடியாக வங்கிக்கோ அல்லது இன்னொரு creptocurr ency ஐ வாங்க பரிமாற்றமோ செய்யலாம்.

சிலர் வருடக்கணக்கில் பூட்டி வைக்காமல் கிழமைக்கு கிழமை அதற்கான வட்டி வரும் போது அதை வங்கிக்கு மாற்றி போட்ட முதல் பணம் வட்டி மூலம் வந்தால் அது லாபமாகவும். பின் முதலை அப்படியே வைத்து கொள்பவர்களும் உண்டு அல்லது முதலோடு எடுத்து போதும் என்று விட்டு இன்னொரு creptocurrency இல் போடுவார்கள்.

இந்த crepto currency இல் உள்ள மாயம் என்னவென்றால் குறித்த crepto currencyஇற்கு ஓர் கூறிற்கு ஒரு விலை இருக்கும். அதை நீங்கள் குறைந்தளவு டொலர் கொண்டு வாங்கி கொண்டிருந்தால் உங்களுக்கு குறைந்த வருமானம் கிடைக்கும்.

ஓர் உதாரணத்துக்காக நீங்கள் 1000$ இற்கு குறித்த crepto currency ஐ கொள்வனவு செய்கிறீர்கள். அதன் மூலம் 3 மாதத்திற்குள் 1500$ கிடைக்கப்பெற்றால் வந்த லாபமான $500 ஐ சிலர் வங்கிக்கு மாற்றிவிட்டு போட்ட முதல் 1000$ ஐ மீளவும் பூட்டி வைத்து லாபம் பார்பார்கள்.

மீளவும் $500 கிடைத்தால் முதலிட்ட பணம் வந்துவிட்டதல்லவா. ஆகவே தாங்கள் "safe zone" இற்குள் வந்துவிட்டோம் என்று எண்ணுவார்கள். சிலர் முதல் போட்ட $1000 ஐயும் சேர்த்து திருப்பிவிடுவார்கள். ஆக அவர்களுக்கு $1000 லாபம்.

சில சிமாட்டானவர்கள் மொத்தமாக மீளப்பெற்று வேறு நம்பிக்கையான creptocurrency யில் இலாபத்தை மட்டும் முதலிடுவார்கள். ஆக அவர்களுக்கு இழப்பென்று இனி ஒன்றுமில்லையல்லவா. அவர்கள் இனி இழந்தாலும் கவலையில்லை.

ஏனெனில் $1000 முதலிட்டு $2000 பெற்றார்கள் ஆக முதல் $1000 அவர்களுக்கு வந்துவிட்டது. பின் லாபம் $1000 தான் crepto currencyகளில் முதலிடுவார்கள்.

ஆனால் பலரோ ஒரு மோகத்தில் வீழ்ந்துவிடுவார்கள். அது என்னவென்றால் $1000 போட்டு 3 மாதத்தில் $1000 லாபம் வந்து விட்டதே நேர்மையாக கிடைத்துவிட்டதே என அதன் நம்பக தன்மை உணர்ந்த பின் மேலும் அதிக தொகை உதாரணமாக $5000 முதலிட ஆசைப்படுவார்.

அப்படி அதிலும் லாபம் கிடைத்தால் ஆஹா நல்ல லாபமாக இருக்கிறதே இன்னும் பணம் பார்க்கலாம் என அதில் மூழ்கி இன்னும் அதிகமாக கடன் வாங்கி அல்லது நகைகளை அடகு வைத்து பல ஆயிரம் டொலர்களைப் போட்டு crepto currency வாங்கி லொக் பண்ணிவிடுவார்கள்.

இப்படி பல்வேறு நாடுகளில் இருந்து பல கோடி பேர் மோகம் கொண்டு பல ஆயிரம் டொலர்களை போட்டு விட்டு லொக் செய்தால். அந்த crepto currency காரன் கடையை இழுத்து மூடிவிட்டு போய்விடுவான். அவன் யார் எங்கே என்றெல்லாம் உங்களுக்குத் தெரியாது. எல்லாம் ஒன்லைன் "அப்" அல்லவா!! திடீரென்று அந்த "ஆப்"பையே காணக்கிடையாது.

அதாவது முன்னர் பிரமிட் வியாபாரம் என சொல்லிவிட்டு பல மக்களிடம் ஏப்பம் விட்டு மாயமாக மறைவார்களே அதுபோல தான் (அண்மையில் சிங்களக் கிராமத்திலும் இப்படி சம்பவம் நடைபெற்றிருக்கிறது.200 கோடி ஏப்பம் விட்டு தம்பதிகள் தலைமறைவு)

ஆக கொம்பனிகள் மூலம் யார் என்று தெரிந்து ரிசீற் எல்லாம் கொடுக்கப்பட்டே இப்படி கண் முன்னே மோசடி நடக்கும் போது , கண்ணுக்கு புலப்படாத crepto currency, யார் இயக்குகிறார்கள் என்றே தெரியாத நிலையில் நம்பகத்தன்மை இல்லா crepto currency களில் முதலிட்டால் அவன் கடையை இழுத்து சாத்திவிட்டு போனால் சட்டைக் கொலரை கூடப் பிடித்து கேட்க முடியாதல்லவா!

உறவுகளே!!

crepto currency மூலம் பணம் பார்க்கலாம் அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை! ஆனால் அதில் பாண்டித்தியமோ அனுபவமோ இல்லாமல் கரன்சிகளை வாங்குவதும். அல்லது யாருடைய மண்டையைக் கழுவும் பேச்சுகளில் ஈடுபட்டு அவர்கள் மூலம் crepto currency களை வாங்கி வியாபாரம் செய்யப் போகாதீர்கள்.

சமூகத்தில் பல ஒன்லைன் மோசடியாளர்கள் இயங்குகிறார்கள். அவர்கள் உங்களை வசியப்படுத்தி crepto currencyயில் முதலிட்டு இலாபம் தருகிறேன் என அழைப்பார்கள்.

தொடர்ந்து கரைச்சலும் தருவார்கள். தாங்கள் உழைத்த பணத்தினையும் ஆதாரமாக காட்டுவார்கள். அதன் மூலம் உங்கள் பணத்தை கொண்டு முதலிட்டு உங்களுக்கு இலாபமும் காட்டுவார்கள். பின் "பார்த்தியா சொன்னன் தானே $1000 போட்டதிற்கே இவ்வளவெண்டால் $10 000 போட்டா எவ்வளவு உழைக்கலாம் வேலைக்கே போகத்தேவையில்லை" என்று ஆசை வார்த்தைகள் கூறி பல ஆயிரம் டொலர்கள் ( பல இலட்சம் ரூபாக்கள்) உங்களிடம் இருந்து பெறுவார்கள். அப்படி பலரிடமும் பெற்று crepto currency வாங்காமல் பணத்தினை தன் கணக்குக்கு மாற்றினால் என்னவாகும். அவர்கள் இலகுவாக சொல்வார்கள் "அந்த creptocurrency இல்லாமல் போய்விட்டது" என நீங்கள் கையைத் தலையில் கைவைக்க வேண்டியது தான். சில லட்சங்கள் முதலிட்டவர்கள் என்றால் பரவாயில்லை ஆனால் பல லட்சங்களில் கடன் வாங்கி முதலிட்டவர்களின் நிலை என்னவாகும்! தற்கொலைக்கு கொண்டு போய் நிறுத்திவிடும்.

அப்படித்தான் யாழ் போதனா வைத்தியசாலையில் பணிபுரிந்த இந்த இளைஞனுக்கும் நடந்திருக்கலாம்.

ஆகவே முன்னர் இடம்பெற்ற பிரமிட் வலையமைப்பு மோசடிகள் போல இப்போது crepto currency மோசடிகளும் அதனாலான தற்கொலைகளும் நிகழ்கின்றன.

ஆகவே உறவுகளே விழிப்புணர்வடையுங்கள்.

உங்களுக்கு தெரியாத வற்றுக்கு போகாதீர்கள். பணத்தை இழந்து வாழ்க்கையினையும் இழக்க வேண்டி வரும்.

crepto currency இல் முதலிடுவதால் சம்பாதிக்கலாம்தான் ஆனால் அதை கையாள தெரிந்தால் மட்டும் சிறு அளவில் ஈடுபடுங்கள். பாரிய பணங்களில் முதலிட வேண்டாம். உங்களுக்கு தெரியாவிட்டால் வேறு நபர் மூலம் ஒருபோதும் முதலிட வேண்டாம்!, முதலிட வா.வா என யாராவது கரைச்சல் கொடுத்தால் முகத்திற்கு நேரே சொல்லிவிடுங்கள் "எனக்கு இதில் ஆர்வம் இல்லை என"!

எம் நிலத்தில் இனியொரு உயிரிழப்பு crepto currency ஆல் வேண்டாம்.



கு.மதுசூதன்
B.Sc(Hons), M.sc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு; கன்ரர் வாகனம் பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமான முறையில் ஏற்றப்பட்ட மணலுடன், இலக்கத் தகடற்ற கன்ரர் வாகனம் ஒன்றை யாழ்ப்பாணப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அரியாலை பகுதியில் கும்பல் ஒன்று சட்டவிரோதமாக வாகனம் ஒன்றில் மணல் ஏற்றிக்கொண்டிருப்பதாக யாழ்ப் பாணப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்த போது, பொலிஸாரைக் கண்டதும் மணல் ஏற்றிக் கொண்டிருந்தவர்கள் வாகனத்தை அவ்விடத்தில் கைவிட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

வாகனத்தைக் கைப்பற்றிய பொலிஸார் வாகனத்தின் இலக்கத் தகடு அற்ற நிலையில், வாகனத்தின் இயந்திர இலக்கம் மற்றும் வாகன அடிச்சட்ட இலக்கத்தின் அடிப்படையில் வாகன உரிமையாளரைக் கைது செய்வதற்கு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-33)

# 'கடந்த காலத்தின் நிழல்கள்' புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சர்வதேச விருது பெற்ற ஆவணப்பட புகைப்படக் கலைஞர் தர்மபாலன் ரிலக்சனின் புதிய புகைப்படக் கண்காட்சி "shadows of the past" கடந்த 8 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இல.50, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலாசார மையத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தக் கண்காட்சி இலங்கையின் உள்நாட்டுப் போருக்குப் பிறகு நிலம், வீடுகள், மக்களின் நினைவுகளில் பதிந்த காயங்களையும் அமைதியான நினைவுகளையும் பதிவு செய்கிறது.

போரின் நேரடிக்காட்சிகளுக்கு அப்பால் அதன் நிழல்களில் வாழும் மக்களின் உணர்வுகளையும் மன நிலையையும் ரிலக்சன் தனது புகைப்படங்களின் வழியே வெளிப்படுத்துகின்றார். (3-33)

# கலாசாலையில் வீரமணி ஐயர் நினைவரங்கம்

(யாழ்ப்பாணம்)

மகாவித்துவான் ம.த.ந. வீரமணி ஐயர் நினைவரங்கம் இன்று செவ்வாய்க்கிழமை காலை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீடப் பீடாதிபதி றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு நினைவுப் பேருரை ஆற்றுவார். அத்துடன் கலாசாலையில் உள்ள வீரமணி ஐயர் திருவுருவச் சிலைக்கான வழிபாடும் இடம் பெறவுள்ளது. (8-33-104)

# வாகன வரி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தம்

(யாழ்பாணம்)

நாடளாவிய ரீதியில் கடந்த 10 ஆம் திகதியிலிருந்து வாகன வருமான வரி வலையமைப்புக் கட்டமைப்பில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக வாகன வரி அனுமதிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கையை முன்னெடுக்க முடியாதுள்ளதென நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (3)



காரைநகர் பிரதேச செயலகத்திற்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளராகத் துரைசிங்கம் ஜெயந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் கடந்த 10 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் பிரதீபன் அவர்களிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

இவர் முன்னர் முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது

(நெளுக்குளம்)'

முல்லைத்தீவு -புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூங்கிலாறு வடக்கு பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

23 வயதுடைய இளம் குடும்பஸ்தர் ஒருவரே, 108 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் தனது வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் உடையார் கட்டுப் பகுதியில் அமைந்துள்ள குறித்த நபரின் வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது விற்பனைக்காக வைத்திருந்த ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் இதற்கு முன்னரும் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு புனர் வாழ்வு அளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுக்குடியிருப்பு பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.(8-299)

# தகவல் அறியும் உரிமைச் சட்டம்; வவுனியாவில் விழிப்புணர்வு முகாம்




(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் இயங்கிவரும் நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டின் கீழ் தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு மற்றும் சேவை வழங்கல் முகாம் கடந்த 9 ஆம் திகதி வவுனியா பிரதேச செயலகத்தின் இரசேந்திரகுளம் கிராம சேவகர் பிரிவில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.

குறித்த நிகழ்வில் நிறுவன இணைப்பாளர் வ.ரவீந்திரகுமார் கருத்துரைத்தபோது, "சட்டம் அனைவருக்கும் சமமானது. அதன்படி, தகவல் அறியும் சட்டம் குறித்த அறிவும், அதனை நடைமுறையில் பயன்படுத்தும் திறனும் மக்களிடம் உருவாகுவது மிக முக்கியம்.

இதனை நடைமுறையில் கொண்டு வருவதற்காகவே வவுனியா மாவட்டத்தில் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (8-299)

# டெங்கு பரவும் சூழல்; 16 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு ஏற்றவாறு வீட்டு வளாகத்தினைப் பேணிய குற்றச்சாட்டில் இரு குடியிருப்பாளர்களுக்கும் 16 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் போது, இரு வீடுகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய சூழல் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து வீட்டின் குடியிருப்பாளர்கள் இருவருக்கும் எதிராகப் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட வேளை, குடியிருப்பாளர்கள் இருவரும் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து, அவர்களை எச்சரித்த மன்று இருவருக்கும் தலா 8 ஆயிரம் ரூபாய் வீதம் தண்டம் விதித்தது. (8-33)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 220 | 180 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 300 | 250 |
| தக்காளி | 200 | 220 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 300 | 160 |
| கோவா | 180 | 200 | 200 | 200 |
| கரட் | 140 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 |
| புடோல் | 300 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 200-300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 150 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 200 | 250 | 300 | 250 |
| பீற்றூட் | 150 | 120 | 200 | 150 |
| கறிமிளகாய் | 350 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 250 | 180 |
| கீரை – 1 பிடி | 140 | 80-160 | 150 | 100 |
| தேசிக்காய் | 1600 | 2000 | 1600 | 2400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 750 | 1000 | 1200 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 400 |
| முள்ளங்கி | 150 | 100 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 80 |
| வல்லாரை | 80 | 60 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 250 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இயந்திர நாற்றுநடுகை கிளிநொச்சியில் முன்னெடுப்பு



(தருமபுரம்)

நவீன விவசாய நடவடிக்கைகளை ஊக்குவித்து, விவசாயிகள் உச்ச பயனை அடையும் செயற்பாடுகளில் ஒன்றான இயந்திர நாற்று நடுகை கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தினால் நேற்றைய தினம் யூனியன் குளம் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதிக்கு பொறுப்பான விவசாய போதனாசிரியர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் வி.சோதிலட்சுமி, பாட விதான உத்தியோகத்தர்கள் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த பகுதியில் 40 ஏக்கர் வரை இயந்திர நாற்று நடுகை மூலம் செய்கை மேற்கொள்வதற்கு விவசாயிகள் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# நீட்டிக்கப்படவுள்ள பாடசாலை நேரம்

(கொழும்பு)

வரவிருக்கும் கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் பாடசாலை நேரம் பிற்பகல் 2 மணி வரை நீட்டிக்கப்படவுள்ளதால், மாணவர்களின் போக்குவரத்துக்குத் தேவையான மாற்றங்கள் குறித்து போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து தொடர்பாக ஏற்கனவே சம்பந்தப்பட்ட தரப்பினருடன் முதற்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் மற்றொரு சுற்று கலந்துரையாடல் நடைபெறும் என்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் செயலாளர் நலகா கலுவேவா குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் "இது குறித்த தேவையான தகவல்களை நாங்கள் ஏற்கனவே வழங்கியுள்ளோம். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு தற்போது நிலைமையை மீளாய்வு செய்து வருகின்றது. புதிய பாடசாலை அட்டவணை அமுலுக்கு வந்தவுடன் போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பான தேவைகளை நாங்கள் தெரிவிப்போம். போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி அதற்கேற்ப பதிலளிக்கும்." எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருமென எதிர்பார்க்கப்படும் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்களின் கீழ், தரம் 1 முதல் 6 ஆம் வகுப்பு வரையிலான பாடசாலை நேரம் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நீட்டிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# பகிரங்க அறிவித்தல்
## ஆதன உரிமை வெளிப்படுத்தல்

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவு சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கிராமசேவகர் பிரிவு J/294 நாவற்குழி, கோவில்பற்று, நாவற்குழி கொட்டநலங்காட்டுக்கு வடக்கு மணற்காடு நிலப்பரப்பு 15 குளி 5.5 இதில் வடக்கு புறமாய் நிந்தமாக்கப்பட்ட நிலப்பரப்பு 07 குளி 3.63 இதில் தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 12755 இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 03 குளி 3.63 ஆதனமாகும்

மேலே விபரிக்கப்பட்ட ஆதனமானது யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு இ.தங்கராசா முகதாவில் 19.01.1981 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 64 ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி தங்களில் மூன்றாம் பேர்வழியின் சொந்தமும் நிந்தமும் ஆட்சியும் எனவும் யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கரன் முகதாவில் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் கைம்பெண் திலகவதி அவர்களால் 30.12.2013 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 2414 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதி முடிக்கப்பட்டு சங்கடத்தார் வளவு கோப்பாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகேஸ்வரனும் பெண் மணிமேகலையும் அவர்களுக்கு 17.02.2014 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 2559 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதிப்படி வந்தடைந்து தற்போது ஒரே ஆதனமாக கொட்டநலங்காட்டுக்கு வடக்கு மணற்காடு நிலப்பரப்பு 15 குளி 5 ½ பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 2022.02.09 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 9710 ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி சுப்பிரமணியம் தயாளன்டேஸ்வரனுக்கு வந்தடைந்து யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசும் சட்டதரணியும் க.நிசாந்தன் முகதாவில் நிறைவேறிய 31.08.2022 ஆம் ஆண்டு திகதியிடப்பட்டு 357 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதிப்படி இராசசிங்கம் விக்ராஸ்ரான்லி புஸ்பகுமார் என்பவருக்கு வந்தடைந்தது

இவ் ஆதனத்திற்கு இராசசிங்கம் விக்ராஸ்ரான்லி புஸ்பகுமார் என்பவர் உடைமைச்சான்றிதழ் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்தின் உரிமை தொடர்பாக ஆட்சேபனை இருப்பின் அதனைப் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்பட்டுள்ள ஆவணங்களுடன் பதிவுத்தபால் மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு ஆட்சேபனை தெரிவிக்கவோ அல்லது உரிமை கோரவோ எவரும் இல்லையெனின் சாவகச்சேரி பிரதேசசபையால் இராசசிங்கம் விக்ராஸ்ரான்லி புஸ்பகுமார் என்பவருக்கு குறித்த ஆதனத்திற்கு உடைமைச்சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இவ்வாதன உடமை மாற்றம் தொடர்பான எவ்விளைவுக்கும் சாவகச்சேரி பிரதேசசபை பொறுப்பாகமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**பொன்னையா குகதாசன்,**
**தவிசாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**

(C-4098)


வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



## அகவை ஒன்பதில் அறிவுத்திருக்கோவில்

நாளை 15.10.2025 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு
"தமிழகஅரசின் இந்து அறநிலைத்துறையின் உயர்மட்டஆலோசகரும்
சொல்லின்செல்வர் என ஆன்மீகஆர்வலர்களாலும் அன்பாக அழைக்கப்படும்
கலைமாமணி சொல்வேந்தர் சுகி சிவம்"அவர்களின் சொற்பொழிவு
நடைபெறவுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்
அதன்இன்னொரு அங்கமாக புங்குடுதீவு வட இலங்கை சரிவோதயத்திலும்
மற்றும் கிளிநொச்சி இந்துக்கல்லூரியிலும்மிலும் நடைபெறவுள்ளது.



**தலைப்பு:- விஞ்ஞானமும் மெய்ஞானமும்**
இடம்: யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
காலம்: 15.10.2025(புதன்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணி

**தலைப்பு: செய்யும்தொழிலேதெய்வம்**
இடம்: புங்குடுதீவு வட இலங்கை சரிவோதயம்
காலம் : 16.10.2025(வியாழக்கிழமை)
நேரம்: மாலை 3.30 மணி

**தலைப்பு: வாழ்ந்துபார்க்கலாம் வா**
இடம்: கிளிநொச்சி இந்துக்கல்லூரி
காலம்: 17.10.2025
நேரம்: காலை 10.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம் நன்றி வாழ்கவளமுடன்

தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல. 81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல :- 0212222772,0777368745, 0768571395,0778916403

(C-4097)



## மணிவிழா வாழ்த்து



திருமதி. **பகீரதி சிவயோகராசா**
(S.L.T.S-1 , BA,Dip.in.Edu)
பகுதித் தலைவர் , வரலாறு பாட ஆசிரியர்

Best Wishes

**சேவை விபரம்**

- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி
  11.01.1993 – 18.04.2004
- யா/இணுவில் இந்துக் கல்லூரி
  19.04.2004 – 16.01. 2014
- யா/இராமநாதன் கல்லூரி
  17.01.2014 – 14.10.2025

(5633)

ஆசிரியப் பணியில் முப்பத்தியிரண்டு ஆண்டுகள் வரலாறு ஆசிரியராகவும் பகுதித் தலைவர் ஆகவும் சேவையாற்றி இளைப்பாறும் ஆசிரியையின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்– ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/ இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# 20 பிணைக் கைதிகளை விடுவித்தது ஹமாஸ்

## மகிழ்ச்சியில் இஸ்ரேல் மக்கள்



(ஜெருலேம்)

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தின் காசா (ஹமாஸ்) இடையே கடந்த 2 ஆண்டுகளுக்கு மேல் நடந்து வந்த போர் தற்போது முடிவுக்கு வந்து உள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலையீட்டால் கடந்த வெள்ளிக்கிழமை போர் நிறுத்தம் அமுலுக்கு வந்தது.

இதையடுத்து இரு கட்டங்களாக இரு தரப்பினருக்கும் இடையே கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது. காசாவில் ஹமாஸ் பிடியில் இருந்த இஸ்ரேல் பிணைக் கைதிகளில் 20 பேர் மட்டுமே உயிரோடு இருப்பதாகக் கூறப்படுகிறது.

அவர்களை ஹமாஸ் விடுவிக்க வேண்டும். அதற்குப் பதிலாக இஸ்ரேல் சிறையில் இருந்து சுமார் 1,900 பாலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க செய்ய வேண்டும். இதுதான் போர் நிறுத்தத்தின் முதற் கட்ட நிலை.

இஸ்ரேல்-காசா போர் நிறுத்தம் அமுலுக்கு வந்துள்ளதைத் தொடர்ந்து நேற்று காலை முதற் கட்டமாக இஸ்ரேலிய பிணைக் கைதிகள் 7 பேரை ஹமாஸ் அமைப்பினர் விடுதலை செய்தனர்.

இவர்கள் அனைவரையும் ஹமாஸ் அமைப் பினர் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர். இதைக் கேட்டு அவர்களது உறவினர்கள் பெரும் மகிழ்ச்சி அடைந்த னர்.

இஸ்ரேல் தலைநகர் டெல்அவிவ் உள்ளிட்ட நகரங்களில் .பெரிய திரையில் பிணைக்கைதிகள் விடுவிப்பு நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. அவர்கள் கையில் கொடியுடன் உற்சாகத்தை வெளிபடுத்தினார்கள். இஸ்ரேல் இராணுவம் அவர்களுக்கு உடற்தகுதி சோதனை மேற்கொண்ட பின்னர், தங்கள் சொந்த நாட்டுக்குச் சென்று குடும்பத்துடன் இணைய இருக்கிறார்கள்.

இதற்கிடையே 2ஆவது கட்டமாக 13 பிணைக் கைதிகளை ஹமாஸ் அமைப்பினர் விடுவித்துள ளனர். இதனால் உயிருடன் உள்ள அனைத்து பிணைக் கைதிகளையும் ஹமாஸ் அமைப்பினர் விடுவித்துள்ளனர்.

இவர்கள் இஸ்ரேல் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட இருக்கின்றனர்.


பிணைக்கைதிகளுக்கு ஈடாக பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க இருக்கிறது. போர் நிறுத்த நடவடிக்கைகள் தொடங்கி இருப்பது இரு நாட்டு மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. காசாவில் உயிருக்குப் பயந்து முகாம்களில் தங்கி இருந்த பொதுமக்கள் தங்கள் இருப்பிடத்துக்கு திரும்பத் தொடங்கி இருக்கிறார்கள்.

எகிப்தில் ஷர்ம் அல்-ஷேக் நகரில் அமைதி ஒப்பந்தத்தை இறுதி செய்யும் காசா அமைதி உச்சி மாநாடு நடக்கிறது. இந்த மாநாட்டில் முக்கிய மத்தியஸ்தர்களான எகிப்து ஜனாதிபதி அப்தெல் பத்தா அல்- சிசி உள்ளிட்ட 20இற்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இந்த மாநாட்டில் இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாக இருக்கிறது. இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் போர் நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்காக எகிப்து செல்வதற்கு முன்பாக இஸ்ரேல் சென்றுள்ளார். (நி)

# ஆண்டுக்கு 560 பே

# வறுமைக்குள் தள்ளப்படவு

## ஐ.நா அனர்த்த முகாமை அலுவலகம் சுட்டிக்கா



**(ஜெனீவா) ••••••••••••••••••**

**2030 ஆம் ஆண்டுக்குள், காலநிலை மாற்றம் மற்றும் பேரிடர்களின் தாக்கங்கள் காரணமாக உலகளவில் 37.6 மில்லியன் மக்கள் தீவிர வறுமையில் தள்ளப்படுவார்கள் என ஐக்கிய நாடுகளின் அனர்த்த முகாமைத்துவ அலுவலகம் தெரிவித்துள்ளது.**

2030 ஆம் ஆண்டுக்குள், உலகெங்கிலும் உள்ள நாடுகள், ஆண்டுக்கு சுமார் 560 பேரிடர்களை எதிர்கொள்ளும் என அந்த அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பேரிடர் அபாயக் குறைப்புக்கான உலகளாவிய கலாசாரத்தை

உ
நா
வெ
ஆ
அ
க

# பள்ளத்தில் கவிழ்ந்த பேருந்து 40 பேர் உயிரிழப்பு

## தென்னாபிரிக்காவில் துயரம்


(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் மலைப் பிரதேச வீதியூடாக சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்று, வீதியை விட்டு விலகி, பள்ளத்தில் வீழ்ந்து, கவிழ்ந்ததில் 40இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்விபத்தில் பலர் காயமடைந்ததாகவும் அவர்கள் மீட்புப் பணியாளர்களின் ஒத்துழைப்போடு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவின் தெற்கே ஈஸ்டர்ன் கேப் பகுதியிலிருந்து வடக்கே பிரிட்டோரியா தலைநகரில் இருந்து 400 கி.மீ. தொலைவில் உள்ள லூயிஸ் ட்ரைகார்ட் நகரின் அருகாமையில் நெடுஞ் சாலை வழியாக சென்றுகொண்டிருந்த இந்த பேருந்து, மலைப்பாங்கான பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே பள்ளத்தில் உருண்டு, வீழ்ந்து, மலையடிவாரத்தில் கவிழ்ந்துள்ளது.

விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களில் ஸிம்பாப்வே, மலாவி போன்ற நாடுகளைச் சேர்ந்த பலர் உள்ளடங்குவதாகவும் களத்தில் மீட்புப் பணியாளர்கள் தீவிரமாக செயற்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது. (நி)



பே
செ



(கட்
எகிப்
சர்ம் எல்
நடந்த க
சேர்ந்த
உயிரி
மேலு
தனர்
காசா
இறுதி
மாநாட்
இந்தத்
ஷேக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடர்கள் டவுள்ள மக்கள்!

## மைத்துவ க்காட்டு



உருவாக்குவதற்காக, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 13 ஆம் திகதி சர்வதேச பேரிடர் அபாயக் குறைப்பு தினத்தைக் கடைப்பிடிக்கிறது. ஒற்றுமையின் மூலம் மட்டுமே உலகைப் பாதுகாப்பானதாக மாற்ற முடியும் என்பதே சர்வதேச பேரிடர் அபாயக்குறைப்பு தினத்தின் கருப்பொருளாகும். (நி)

# போர்நிறுத்த மாநாட்டிற்கு செல்லும் வழியில் விபத்து



(கட்டார்)

எகிப்தின் கடற்கரை நகரமான சர்ம் எல்-ஷேக்கிற்கு அருகில் நேற்று நடந்த கார் விபத்தில் கட்டார் நாட்டைச் சேர்ந்த மூன்று தூதர்கள் உயிரிழந்தனர்.

மேலும் இருவர் காயமடைந்தனர்

காசா போர்நிறுத்த ஒப்பந்தத்தை இறுதி செய் வதற்கான உச்சி மாநாட்டின் ஏற்பாடுகளில் பங்கேற்க இந்தத் தூதர்கள் சர்ம் எல்-ஷேக்கிற்குப் பயணித்த போது அவர்கள் பயணித்த வாகனம், நகரத்திலிருந்து சுமார் 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள ஒரு கூர்மையான வளைவில் கவிழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காசா போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் கட்டார் மிக முக்கியமான மத்தியஸ்தர்களில் ஒன்றாகச் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# காசாவில் போர் முடிந்துவிட்டது

## இஸ்ரேல் பயணத்தின் முன் ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் காசாவில் இருந்து பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக இஸ்ரேலுக்கு பயணம் செய்யும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், "போர் முடிந்து விட்டது" என்று தெரிவித்தார்.

ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் பேசிய அவர், போர் நிறுத்தம் நீடிக்கும் என்றும், காசாவிற்கு ஒரு "அமைதி சபை" விரைவில் அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அதேநேரம், போர் நிறுத்த விடயத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் மத்தியஸ்தர்களில் ஒரு நாடான கட்டார் நாட்டின் பங்கையும் அவர் பாராட்டினார். (நி)

# பிலிப்பைன்ஸ் படகு மீது சீனக் கப்பல் மோதல்

## தென்சீனக் கடல் பகுதியில் பதற்றம்

(மணிலா)

தென்சீன கடல் பகுதியில் சீனக் கப்பல், தங்களின் படகு மீது திட்டமிட்டு மோதியதாக பிலிப்பைன்ஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

தென்சீன கடல் பகுதி அதிகளவில் மீன் வளம் மற்றும் எரிவாயு, எண்ணெய் போன்ற வளங்களைக் கொண்டுள்ளது. முக்கிய பொருளாதார ஆதாரமாக உள்ள இப்பகுதியை சீனா, பிலிப்பைன்ஸ் மற்றும் பிற நாடுகள் உரிமை கோரி வருகின்றன.

சீனா, முழுப்பகுதியையும் உரிமை கோருவதுடன், கடலோர காவல்படை கப்பல்கள் வாயிலாக மற்ற நாடுகளின் செயற்பாடுகளை தீவிரமாக தடுத்து வருகிறது.

ஐரோப்பிய நாடான நெதர்லாந்தின் தி ஹேக்கில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றம், கடந்த 2016இல் அளித்த தீர்ப்பில், தென்சீனக் கடலில் உள்ள வளங்கள் மீதான சீனாவின் உரிமை கோரல்களுக்கு, சர்வதேச சட்டத்தில் எந்த அடிப்படையும் இல்லை என்று தெளிவாக கூறியது.

இந்தத் தீர்ப்பை புறக் கணித்து சீனா அதன் ஆதிக்கத்தை நிலைநாட்ட தொடர்ந்து அத்துமீறி வருகிறது. இந்நிலையில், பிலிப்பைன்ஸ் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு தீவு அருகில் நிறுத்தப்பட்டிருந்த, அந்நாட்டுக்கு சொந்தமான படகின் மீது, நேற்று சீன கடலோர காவல்படைக்கு சொந்தமான கப்பல் ஒன்று திட்டமிட்டு, வேண்டுமென்றே மோதியதாக கூறப்படுகிறது. தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பிலிப்பைன்ஸ் கூறியதாவது:

எங்களுக்கு சொந்தமான படகின் மீது, சீனக் கப்பல் வேண்டுமென்றே மோதியுள்ளது. இதில், படகின் பின்புறம் சேதமடைந்துள்ளது. இது அச்சுறுத்தும் தந்திரம் மட்டுமல்ல அத்துமீறலும் கூட இத்தகைய அச்சுறுத்தலுக்கெல்லாம் பிலிப்பைன்ஸ் பயப்படாது. என்று கூறியுள்ளது.

இந்த சம்பவம் குறித்து சீன அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "எங்களின் கப்பலை நோக்கி ஆபத்தான முறையில் வந்த பிலிப்பைன்ஸ் படகுக்கு, தொடர்ந்து பலமுறை எச்சரிக்கை விடுத்தோம்.

"எச்சரிக்கையை பொருட்படுத்தாமல் அந்த படகு, கப்பல் மீது மோதியது. இதற்கான முழுப்பொறுப்பும் பிலிப்பைன்ஸையே சேரும்" என, தெரிவித்துள்ளது.

தென்சீனக் கடலுக்காக, பிலிப்பைன்ஸ், சீனாவைத் தவிர, புருனே, இந்தோனேசியா, மலேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளும் உரிமை கோருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படம் எடுக்க தடைவிதித்த மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்காக தங்கல்லை கார்ல்டன் இல்லத்திற்கு வருகை தருபவர்களுக்கு புகைப் படம் எடுப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகளால் குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சலுகைகளை இரத்து செய்யும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிறகு கொழும்பு விஜேராம அரச இல்லத்தில் தங்கியிருந்த மகிந்த ராஜ பக்ஷ தங்காலை கார்ல்டன் இல்லத்தை நோக்கி இடம்பெயர்ந்தார்.

இதனையடுத்து, அவரைப் பார்வையிடுவதற்காக நாள்தோறும் பெருமளவான மக்கள், அரசியல் வாதிகள் உள்ளிட்டோர் படையெடுத்து வருகின்றனர்.



இவ்வாறு வரும் பொதுமக்கள் உணவுகள் உள்ளிட்டவற்றை மகிந்த ராஜபக்ஷவுக்கு எடுத்து வருவதுடன், அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகாரிகள், அவரோடு புகைப்படம் எடுப்பதற்கு தற்போது தடைவிதித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1992- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி-பா- 14 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSC, MSc, QS
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/16115

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:சுவாதி
கி-பா-25
உயரம்:5'6"
தகைமை/தொழில்-Dip in media, Reporter
எதிர்பார்ப்பு: பட்டதாரி, ஆசிரியர்
தொ.இ: B/16118

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி-பா-45 1/2
2இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L,Ambulance Driver
எதிர்பார்ப்பு: அரசஉத்தியோகம்
தொ.இ: B/16119

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: O/L,Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16122

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:விசாகம்
10இல்சூரிசெவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSC,MBA,Senior Marketing Executive
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16124

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்: பூரம்
3இல்சூரி செவ்
கி-பா-26 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16130

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in ICT
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரசஉத்தியோகம்
தொ.இ: G/16134

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-அத்தம்
2இல்செவ்
கி.பா -23
உயரம்-5"4"
தகைமை/தொழில்: BSC, PHD, QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16137

பிறப்பு-1987-RC
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - A/L, Care Taker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16138

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:கேட்டை
12இல்சூரி செவ்
கி.பா -03
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - MBBS
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/16142

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 459

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## மன்னரும் மக்களும்!

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவரில் மக்களுக்கு நல்ல மரியாதை அவ்வளவு நன்றாக ஆட்சி புரிந்துகொண்டு வந்தார். அவருக்கு வயதாகிவிட்டது அதனாலே ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டார்.

"இதோ பாருங்கள். எனக்கு வயதாகிவிட்டது. அதனாலே இந்த அரச பொறுப்பை எல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்." என்றார். அதன்பின் ராணியைக் கூப்பிட்டார்.

"வா.. நாம் இனி இங்கே இருக்க வேண்டாம். காட்டுக்குப் போய் தவம் செய்யலாம்!" என்று கூப்பிட்டார்.

இந்த செய்தி மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மக்கள் உடனே கூட்டம் கூட்டமாக அரண்மனைக்கு வர ஆரம்பித்துவிட்டார்கள். மன்னரைப் போய் பார்த்தார்கள்.

"அரசே! தாங்கள் எங்களுக்குத் "தந்தை" மாதிரி நீங்கள் காட்டுக்குப் போய்விட்டால் நாங்கள் எல்லாம் இங்கே எப்படி இருக்க முடியும்? எங்களுக்கெல்லாம் எந்தத் துன்பமும் இல்லாமல் பார்த்துக்கொண்டு வருகிறீர்கள். இது மாதிரியான ஒரு அரசாட்சி இல்லை என்றால் மக்கள் வாழ்ந்து என்ன பயன்?" என்றார்கள்.

இருந்தாலும் என்ன செய்வது? வயதாகிவிட்ட காரணத்தினாலே தான் இந்த முடிவுக்கு வந்தேன்!" என்றார் ராஜா.

"அப்படி என்றால் நீங்கள் காட்டுக்குப் போக வேண்டாம். நாங்கள் போகிறோம். நாங்கள் அங்கே போய் தவம் செய்கிறோம். வழிபாடு செய்கிறோம். ஆண்டவன் வருவார். அவரிடம் வரம் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறோம்." என்றார்கள்.

அப்படி சொல்லிவிட்டு உடனே எல்லோரும் காட்டுக்குப் போனார்கள். நாட்டு மக்கள் எல்லோரும் ஒட்டுமொத்தமாக வந்து காட்டிலே உட்கார்ந்து தவம் செய்வதைப் பார்த்தார் கடவுள் உடனே புறப்பட்டு வந்தார். "எல்லோரும் இப்படி வந்து உட்கார்ந்திருக் கீறீர்களே... என்ன வேண்டும் உங்களுக்கு" என்றார். உடனே மக்கள் எல்லோரும் ஒரு குரலிலே சொன்னார்கள்.

"சுவாமி! எங்கள் அரசன் ரொம்ப நாளைக்கு நல்லபடியாக இருக்க வேண்டும். அவர் மகிழ்ச்சியாகவும் உடல் நலத்தோடும் இருந்தால்தான் நாங்கள் அமைதியாக வாழ முடியும்!" என்றார்கள்.

"சரி... அதுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்றார் ஆண்டவன்.

"எங்கள் மன்னருக்கு இன்னும் ஒரு நூறு வருடம் ஆயுளைக் கொடுங்கள்! என்றார்கள்.

"அவ்வளவுதானே... சரி அப்படியே ஆகட்டும்!" என்று சொல்லி விட்டு ஆண்டவன் போய்விட்டார்.

மக்கள் மகிழ்ச்சியோடு திரும்பி வந்தசர்கள்.

"மன்னா! கடவுள் வரம் கொடுத்துவிட்டார். நீங்கள் 100 வருடம் வாழப் போகிறீர்கள்!" என்றார்கள்.

இதைக் கேட்டதும் ராணி... ராஜாவை வணங்கி "நான் தவம் செய்யப் போகிறேன்!" என்று புறப்பட்டார். உடனே மக்கள் என்ன நினைத்தார்கள் தெரியுமா?

"ஐயோ! நாம் ராஜாவுக்கு மட்டும் தானே நீண்ட ஆயுள் வேண்டினோம் வரம் வாங்கினோம். ராணிக்கு வாங்கவில்லையே அதுதான் கோபத்திலே புறப்பட்டார் போல இருக்கு" என்று நினைத்து வருத்தப்பட்டார்கள். ஆனால் ராணி நினைத்தது அது இல்லை!

ராணி போய் தவம் செய்தார். கடவுள் காட்சி கொடுத்தார். இவர் கேட்டார். "சுவாமி! ராஜாவுக்கு மட்டும் 100 வருடம் ஆயுள் என்று வரம் கொடுத்தீர்கள்.

அப்படி என்றால் குடி மக்களும் 100 வருடம் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட குடி மக்கள் இல்லை என்றால் அப்படிப்பட்ட அரசன் இருந்து என்ன பிரயோஜனம்?" என்றார்.

ஆண்டவன் பார்த்தார். "சரி! அவர்களும் 100 வருடம் வாழ்வார்கள்! அது மட்டுமல்ல. நீயும் 100 ஆண்டு காலம் வாழ வரமளிக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டார். இதிலே ஆண்டவன் வருவதும் மறைவதும் முக்கியமில்லை. இதில் கவனிக்க வேண்டியது, ஆள்கின்றவனின் விசால மனம், குடிமக்களின் விசால மனம், ஆள்கிறவன் மனைவியின் விசால மனம்.

இப்படி ஒரு நாடு இருந்து விட்டால் எப்படி இருக்கும் வாழ்க்கை. நினைத்துப் பாருங்கள்! அதனாலே தான் பெரியவர்கள் எல்லாம் சொல்கிறார்கள், "இதய வாசல் திறந்தே இருக்க வேண்டும். இதயத்தின் கதவுகளை மூடாதீர்கள்!" என்று சொல்லுவார்கள்.

என்னிடம் ஒருவர் சொன்னார். "என்னுடைய இதய வாசல் எப்பவும் திறந்தேதான் இருக்கு!" என்றார். "எதனாலே அப்படி சொல்றீர்கள்?" என்று கேட்டேன். "டாக்டரே சொல்லிவிட்டார். என்னுடைய இதயத்திலே ஒரு ஓட்டை இருக்கு என்று! வால்வு சரியில்லையாம்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாற்றுத்திறனாளிகளின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக child first UK மற்றும் CFCD ஆகியோரின் அனுசரணையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு கடந்த 8 ஆம் திகதி களவிஜயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த களவிஜயத்தில், வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக கிராம அலுவலர், கிராம சேவையாளர்கள், சமூகசேவைக்கிளை உத்தியோகத்தர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 03)

# வீட்டு கட்டுமானத்தில் நல்ல திட்டமிடல்




வீட்டுக் கட்டுமானத்தில் நல்ல திட்டமிடலின் உண்மையான அர்த்தம்: கனவிலிருந்து நிம்மதிக்குச் செல்லும் பாதை.

இலங்கையில் தனி வீடு கட்டுவது என்பது பெரும்பாலான குடும்பங்களின் வாழ்நாள் கனவு. ஆனால் அந்தக் கனவு நனவாகும் பயணம் எளிதானது அல்ல. திட்டமிடல் குறைவாக இருந்தால், அந்த முயற்சி மனஅழுத்தம், செலவு மற்றும் சோர்வு போன்ற எதிர்மறை விளைவுகளால் நிரம்பிய அனுபவமாக மாறும்.

**நல்ல திட்டமிடல் என்றால் என்ன?**

பலர் "திட்டமிடல்" என்றால் வரைபடம் அல்லது வடிவமைப்பு செய்வது என்று நினைக்கிறார்கள்.

ஆனால் உண்மையில், வீடு கட்டுவதில் திட்டமிடல் என்பது தொழில்நுட்பம், பொருள் கொள்முதல், நிதி மேலாண்மை மற்றும் மனித உறவுகள் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான செயல்முறை ஆகும்.

ஒரு வீட்டின் வெற்றிகரமான நிறைவேற்றத்திற்கு முக்கியமான மூன்று திட்டமிடல்கள்:

1.தொழில்நுட்ப திட்டமிடல் (Technical Planning)

2.பொருள் கொள்முதல் திட்டமிடல் (Procurement Planning)

3.ஒப்பந்தக்காரர் உறவு திட்டமிடல் (Contractor Relationship Planning)

விரிவான தொழில்நுட்ப திட்டமிடலின் தேவை

பலர், ஒரு பொறியியலாளர் திட்டமிடுவார் என்றால் "சில நாட்களில் எல்லாம் முடிக்க முடியும்" என்று தவறாக நினைக்கிறார்கள்.

ஆனால் உண்மையில், ஆழமான திட்டமிடலானது சிவில் பணிகள், கட்டமைப்பு, மின்சாரம், குழாய் அமைப்பு, நீர்நிலை மற்றும் வடிகால், சுற்றுச்சூழல் மற்றும் நிதித் திட்டமிடல் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆராய்வதைத் தேவைப்படுத்துகிறது.

ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்துவமான வடிவமைப்பு, கட்டிட அமைப்பு மற்றும் தோற்ற அம்சங்கள் இருப்பதால், அவற்றையும் கவனத்தில் கொண்டு திட்டமிட வேண்டும்.

மேலும், ஒரு வீட்டுத் திட்டத்தை சில மணி நேரத்தில் முடிக்க முடியாது, ஏனெனில் ஒவ்வொரு முடிவும் மற்றொரு துறையை பாதிக்கும்-இது ஒரு ஒருங்கிணைந்த மற்றும் விரிவான செயல்முறை ஆகும்.

வடிவமைப்பு மற்றும் விவரக்கட்டமைப்பு முக்கியத்துவம் (Design & Detailing)

வீட்டின் வடிவமைப்பு மற்றும் விவரக் கட்டமைப்பு சிறப்பான கட்டுமான தரத்தை உறுதி செய்யும் முக்கிய அம்சமாகும்.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள்:

கட்டுமான சாத்தியக்கூறுகள் (Constructability) -கட்டுமானம் எளிதாகவும் சிக்கலின்றியாகவும் நடைபெற வேண்டும்.

தேர்வு மற்றும் பரிசோதனை சாத்தியக்கூறுகள் (Inspectability) - வேலைகள் சரியான முறையில் நடைபெறுவதை எளிதில் பரிசோதிக்க முடியும்.

பராமரிப்பு சாத்தியக்கூறுகள் (Maintainability) - வீட்டின் பராமரிப்பு எளிதாக, நீண்டகாலத்திற்கும் சாத்தியமாக இருக்க வேண்டும்.

அகல்திறன் ஒருங்கிணைப்பு (Interior Design)

வீட்டின் அகல்திறன் பணிகளும், கட்டுமானத்தின் மற்ற பணிகளுடன் ஒருங்கிணைந்திருக்க வேண்டும்.

மின்சாரம், ஒளியூட்டும் அமைப்பு, குழாய் மற்றும் பிளம்பிங் பணிகள், கட்டமைப்பு ஆகியவை ஒருங்கிணைக்கப்படாவிட்டால், பின்னர் திருத்தங்கள், செலவு அதிகரிப்பு மற்றும் தரக்குறைவு ஏற்படும்.

வாடிக்கையாளரின் புரிதலுக்கான வழிமுறைகள்

பல வீட்டுத்திட்ட உரிமையாளர்களுக்கு தொழில்நுட்ப அறிவு இல்லாத காரணத்தால், பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கும்.

**இதற்கான தீர்வுகள் :**

ஒவ்வொரு பொருளையும் நேரடியாகக் காண்பித்து ஒப்புதல் (physical sample approval) பெறுதல்.

வீட்டின் முழு வடிவமைப்பை முப்பரிமாணக் காட்சி (3D காட்சி) மூலம் காட்டுதல்.

திட்டத்தின் ஆரம்பத்தில் சிறிய செலவு செய்யும் முறையே, பிறகு பெரிய செலவையும் தாமதத்தையும் குறைக்கும் பாதுகாப்பான வழியாகும்.

மேற்பார்வையின் (Supervision) அவசியம்

திட்டமிடலும் பொருள் கொள்முதலும் சரியாக இருந்தாலும், நல்ல மேற்பார்வை இல்லையெனில் தரம் பாதிக்கப்படும்.

உதாரணமாக, கொன்கிரீட்டில் நீர் அளவு சரியாக இருக்க வேண்டும்.

மேற்பார்வை மூலம், கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி நடக்கின்றன, தரம் பாதிக்கப்படாமல் உறுதி செய்யப்படுகிறது.

தற்போது கட்டுமானத் துறையில் சில தகுதியற்றவர்கள் தவறான வழிகாட்டலுடன் பெரும்பாலும் பங்கேற்கின்றனர்.

உதாரணமாக, சிலர் கான்கிரீட்டில் அதிகமான நீர் சேர்த்தால் தரமான கலவை உருவாகும் என்று தவறாக நம்புகிறார்கள்.

இந்தப் பழக்கம் வீட்டின் நிலைத்தன்மை மற்றும் பாதுகாப்பை நேரடியாகப் பாதிக்கிறது. மேலும் உரிமையாளர்களுக்கு பெரும் செலவும் மனஅழுத்தமும் ஏற்படுகிறது.

திட்டமிடல் இல்லாமையின் விளைவுகள்

சரியான திட்டமிடல் இல்லையெனில், ஆரம்பத்தில் சிறியதாகத் தோன்றும் பிரச்சினைகள் பின்னர் பெரிய சிக்கல்களாக மாறுகின்றன.

ஒப்பந்தக்காரர்களுடன் வாதங்கள், வேலை தாமதம், தரக்குறைவு மற்றும் செலவு அதிகரிப்பு வழக்கமாகும்.

இந்த நிலைமைகள் வீட்டின் உரிமையாளருக்கு கடுமையான மனஅழுத்தத்தையும் உடல் சோர்வையும் ஏற்படுத்தும். மேலும் வீடு கட்டும் கனவு, இறுதியில் மனச்சோர்வான சுமையாக மாறும்.

அனுபவமுள்ள பொறியியலாளரின் பங்கு

ஒரு திறமையான பொறியியலாளர்:

தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை ஒருங்கிணைத்து திட்டமிடுகிறார்.

செலவும் தரமும் சமநிலைப்படுத்தி தீர்மானங்களை எடுக்கிறார்.

ஒப்பந்தக்காரர்களுடன் நியாயமான உறவைப் பராமரிக்கிறார்.

உரிமையாளருக்கு பொருட்கள் நேரடியாக காட்டப்படுவதையும், முப்பரிமாணக் காட்சி மூலம் விளக்கப்படுவதையும் உறுதி செய்கிறார்.

வீட்டின் உரிமையாளரின் நலனுக்காக ஒவ்வொரு முடிவிலும் வழிகாட்டுகிறார்.

**முடிவுரை**

வீடு கட்டும் போது "எப்படி கட்டுவது?" என்ற கேள்விக்குப் பதிலாக, "எப்படி திட்டமிடுவது?" என்ற கேள்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

பலர் பொறியியலாளருக்குச் செலுத்தும் கட்டணம் வீணாகும் என்று தவறாக எண்ணுகிறார்கள்.

ஆனால் உண்மையில், அனுபவமுள்ள பொறியியலாளர் இல்லாமல் கட்டுமானம் மேற்கொள்ளும்போது, அவர்கள் தரமற்ற மற்றும் குறைந்த மதிப்புள்ள வீடு பெறுவதற்கே பணம் செலவழிக்கிறார்கள்.

சரியான திட்டமிடல் மற்றும் அனுபவமுள்ள பொறியியலாளரின் வழிகாட்டுதலுடன், கனவாகத் தொடங்கிய வீடு தரமான, பொருளாதாரமான, பராமரிக்க எளிதான, நீடித்த மற்றும் மன அமைதியுடனான வீடாக மாறும்.

சுருக்கமாகச் சொன்னால், நல்ல திட்டமிடல் என்பது வெறும் வரைபடம் அல்ல - அது உங்கள் வீட்டின் தரம், செலவு, பராமரிப்பு சாத்தியக்கூறுகள், அகல்திறன் ஒருங்கிணைப்பு, முப்பரிமாணக் காட்சி மூலம் புரிதல் மற்றும் மன அமைதி ஆகிய அனைத்தையும் தீர்மானிக்கும் அடித்தளம்.

(தொடரும்)

இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,
வடக்கின் அத்தியாயம்.

# இராசிபலன்

14.10.2025
புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை
அட்டமி பிற்பகல் 4.44 மணிவரை

புநர்பூசம் பிற்பகல் 5.49 மணிவரை
சுப நேரம் 10.32 -12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

அட்டமி -நவமி
சந்திராஷ்டமம்-கேட்டை, மூலம்.

வளவன்

**மேஷம்**

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்**

கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, எப்பிடி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**

தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றமுண்டு.

**மகரம்**

விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**ரிஷபம்**

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், உற்சாகத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள்.

**சிம்மம்**

உறவினர்களைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்**

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்**

பொது வாழ்வில் ஆரோக்கியம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**மிதுனம்**

நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கன்னி**

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செல்வ நிலை உயரும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு**

குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், கௌரவக் குறைவான நாள்.

**மீனம்**


தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

அமைதியான உள்ளமே மகிழ்ச்சிக் கடலின் எல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பழுவேட்டரையன் வேண்டுமென்றே அந்த எலும்புக்கூடுகளை எடுக்காமல் விட்டு வைத்திருக்கிறான். ஒருவரும் அறியாமல் இந்த நிலவறைக்குள் நுழைகிறவர்கள் எலும்புக்கூடுகளைப் பார்த்துப் பயந்து சாகட்டும் என்று.."

"அப்படி யாருக்கும் தெரியாமல் இந்த நிலவறையில் பிரவேசிக்க முடியுமா, என்ன?"

"சாதாரணமாக யாரும் நுழைய முடியாது. என்னைத் தவிர அப்படி யாரும் நுழைந்திருப்பார்கள் என்று தோன்றவில்லை. நானும் இளையராணி அல்லது அவளுடைய தோழியின் உதவியினால்தான் இங்கு வந்திருக்கிறேன்.." "பின்னே மனிதர்களின் எலும்புக்கூடுகளைப் பற்றிச் சொன்னாயே?"

"அதுவா? பழுவேட்டரையன் யாரையாவது பயங்கரமாகத் தண்டிக்க விரும்பினால், நிலவறைக் கதவை இலேசாகத் திறந்து வைத்து விடுவான். பொக்கிஷ நிலவறையைப் பற்றிக் கேட்டிருப்பவர்கள் பொருளாசையினால் இதில் நுழைவார்கள். அப்புறம் இதைவிட்டு வெளியில் போவதில்லை."

"நீ ஒருவனைத் தவிர இங்கு வந்தவன் யாரும் வெளியில் போனதில்லையென்றா சொல்லுகிறாய்?"

"முன்னேயெல்லாம் அப்படித்தான் இப்போது இரண்டு பேரைப் பற்றி எனக்குச் சந்தேகமாயிருக்கிறது"

"யாரைச் சொல்லுகிறாய் என்று எனக்குத் தெரியும் வல்லவரையனையும், கந்தமாறனையும் சொல்லுகிறாய்." "ஆமாம்." "அவர்களை நாம் இன்னும் உயிரோடு விட்டு வைத்திருக்கிறோமே!"

"எத்தனை தடவை உனக்குச் சொல்வது? வல்லவரையனை ஒரு முக்கியமான காரியத்துக்காகத்தான் இளையராணி விட்டு வைத்திருக்கிறாள். சுந்தர சோழனுடைய குலம் நசிக்கும் போது வந்தியத்தேவனும் சாவான். அதற்குக் காலம் நெருங்கி விட்டது. வா! வா! இந்த நிலவறையிலுள்ள சுரங்கப் பாதைகளை எல்லாம் உனக்குக் காட்டுகிறேன் ஒரு காரியத்தில் மட்டும் ஜாக்கிரதையாயிரு! இங்கே நவரத்தினக் குவியல் வைத்திருக்கும் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதில் நூறு வருஷங்களாகச் சோழர்கள் சேர்த்து வைத்த நவரத்தினங்களைக் கும்பல் கும்பலாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்த நவரத்தினங்களின் மோகத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டால், நீ வந்த காரியத்தையே மறந்து போனாலும் போய்விடுவாய்!" "ரவிதாஸா! யாரைப் பார்த்து இந்த வார்த்தை சொல்கிறாய்? உன்னைப் போல் நானும் வீரபாண்டியனுடைய தலையற்ற உடலின் மீது சத்தியம் செய்து கொடுத்தவன் அல்லவா?"

"யார் இல்லை என்றார்கள்? அந்த நவரத்தினக் குவியல்களைப் பார்த்தபோது என் மனது கூடச் சிறிது சலித்துப் போய் விட்டது அதனாலேதான் எச்சரிக்கை செய்தேன். இருக்கட்டும் வா, போகலாம், முதலில் சோழன் அரண்மனைக்குப் போகும் வழியை உனக்குக் காட்டுகிறேன்.

அதைக் காட்டிவிட்டு நான் போன பிறகு நீயே சாவகாசமாக இந்த நிலவறை முழுவதையும் சுற்றிப் பார்த்துக் கொள் பின்னொரு காலத்தில் உபயோகமாகயிருக்கலாம்."

(தொடரும்...)


# MUNICIPAL COUNCIL, JAFFNA
# INVITATION FOR BIDS

## PROCUREMENT FOR SUPPLYING OF STRRET LIGHT WITH FITTING ACCESSORIES -2025-III

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Municipal Council, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders as in the table below:
2. Bidding will be conducted through National Competitive Bidding.
3. Interested eligible bidders may obtain further information from Mayor/ Commissioner, Jaffna Municipal Council. TP: 021-2217691/021 222 2275, Fax:021 222 2334 E-Mail: pmdjaffnamc@gmail.com office hours from 09:00 hrs. To 15:00 hrs.
4. In these quotations are limited suitable business or company registrations and shall not include black list tenders.
5. **bidders shall also register themselves with the registrar of public contract Sri Lanka, in terms of the public contract Act No 03 of 1987.** Additional details are provided in the bidding document.
6. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders from the address given below from **15th Oct 2025 until 28th Oct 2025 from 09:00 hrs. to 14:00 hrs.** on the submission of a written application and upon a payment of non-refundable fee. The payment method will be paid by cash or bank draft drawn in favor of **Commissioner, Jaffna Municipal Council.**
7. Bids must be delivered to the address given below on or before **29th Oct 2025 at 10.30 hrs.** Bid number must be written on the top of envelop. Late bids will be rejected. Immediately after closing of bids will be opened in the presence of the bidders' representatives' who choose to attend at the address given below. **All bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.**
8. A pre bid meeting will be held at Jaffna Municipal Council, Point Pedro Road, Jaffna on **23rd oct 2025** at 11:00 hrs., interested bidders may participate in this meeting their own expenses.
9. The address referred to above is **Chairman, Procurement Committee> Jaffna Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna.** The Bid Name & No must be mentioned on the top of the envelop. The bid will be sent in post/ in courier service or shall be deposited in the bid box in the above address.

| S/N | Bid No. | Tittle of the procurement | Estimated Amount (Without VAT) Rs. million | Period of Contract | Bid Validity Period | Bid Security | | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Amount | Required Period | |
| 01 | JMC/PMD/02/ STREET LIGHT WITH FITTING ACCESSORIES - 2025 - III | PROCUREMENT FOR SUPPLYING OF STREET LIGHT WITH FITTING ACCESSORIES - 2025 - III | 15.0 | 60 days | 77 days | 150,000.00 | 10.02.2026 | 3,500.00 |

**Chairman, Regional Procurement Committee,**
**Municipal Council, Point Pedro Road, Nallur, Jaffna**
**14.10.2025**

(C-4100)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வுகளின் தேடல் சில ஆச்சர்யங்களுக்கும், சோத னைகளுக்கும் நாம் தயாராக இருக்க வேண்டும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## செய்த பாவத்துக்கு கழுவாய் தேடுங்கள்

**ஊழிற்பெரு வலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்** என்பார் வள்ளுவர்.

என்னதான் நாம் வீராப்புப் பேசினாலும் நாம் செய்த ஊழ்வினை எங்களை முந்திச் செல்லும்.

எனவே பாவ காரியத்தைச் செய்துவிட்டு தப்பிவிடலாம் என்று யார் நினைத்தாலும் அது மகா தவறு.

ஆம், ஊழ்வினைப் பயனை அனுபவித்தே ஆக வேண்டும். இதை வள்ளுவர் மட்டுமல்ல. சிலப்பதிகாரத்தைத் தந்த இளங்கோவடிகள்; **ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்** என்றார்.

ஆக, ஊழ்வினையில் இருந்து தப்பமுடியா தென்பதை ஞானிகளும் யோகிகளும் கூறி வைத்துள்ளனர். அதனை அனுபவ ரீதியிலும் நாம் கண்ணுற்றோம்.

உண்மை. வன்னிப் பெருநிலப்பரப்பில் அப்பா வித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த கொடியவர்கள் இன்று ஆற்றலைகின்றனர்.

எப்படி இருந்தவர் இப்படி ஆயிற்றாரே என்று உலகம் ஏளனம் செய்யும் அளவில் அவர் களின் நிலைமை வந்துற்றது.

இதை நாம் கூறும்போது, செய்த பாவத் தினின்று விடுதலை பெற முடியாதா? என்ற கேள்வி எழும். இங்குதான் ஓர் உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது பாவ பழியில் இருந்து எவரும் மீள முடியாது. செய்த வினைப் பயனை அனு பவித்தேயாக வேண்டும்.

எனினும் சில பரிகாரங்களைச் செய்வதன் மூலம் மனத்தளவில் ஆற்றுப்பட முடியும்.

ஆம், வன்னிப் போரின் இறுதிக்கட்டத்தில் வெள்ளைக் கொடியுடன் சென்றவர்களை இலங்கைப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

வெள்ளைக் கொடியுடன் இராணுவத்திடம் செல்லுமாறு கூறிவிட்டு, வெள்ளைக் கொடியு டன் சென்றவர்களைச் சுட்டுக்கொன்ற சம்ப வம் வன்னிப் போரில் இடம்பெற்ற போர்க்குற் றங்களில் ஒன்றெனப் பதிவு செய்யப்பட்டது.

எனினும் வெள்ளைக் கொடியுடன் சென்ற வர்களைச் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டது யார்? அவர்களைச் சுட்டவர்கள் யார்? என்ற வினாக்கள் இன்னமும் விடையின்றிக் கிடக் கின்றன.

இந்நிலையில் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா; ஓர் அதிர்ச்சியான – பரபரப்பான செய்தியைக் கூறியுள்ளார்.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்களைச் சுட்டுக் கொல்லுமாறு கூறியது யார் என்பதைக் காணொளி மூலம் வெளிப்படுத்துவேன் என் பதே அவர் கூறிய விடயமாகும்.

இந்தச் செய்தியோடு ஒரு கணம் திரும்பிப் பாருங்கள்.

அப்போதைய இராணுவத் தளபதியாகிய சரத் பொன்சேகா போர் வெற்றியை ஜனாதிபதி மகிந்தவுக்கு அறிவிக்கின்ற அந்தக் காட்சி தெரிகிறதல்லவா.

அட, 2009 மே மாதம் நடந்த அந்த நிகழ் வையும் 2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியதையும் ஒப்பிட்டுப் பாருங்கள். இதுதான் இயற்கையின் தீர்ப்பு.

பரவாயில்லை. தமிழ் மக்களுக்குச் செய்த பாவத்துக்கு கழுவாய் தேடும் பொருட்டேனும் வெள்ளைக் கொடி விவகாரத்தை சரத் பொன் சேகா பகிரங்கமாக விரைந்து வெளிப்படுத்த வேண்டும்.

## மன்னார் கனிய மணல் அகழ்வு வழக்கு உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்பு

மன்னார் தீவில் சட்ட விரோதமான முறையில் முன்னெடுக்கப்படும் கனிய மணல் அகழ்வைத் தடுத்து உத்தர விடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப் படை உரிமை மனுவை விசாரணைக்கு எடுத் துக் கொள்ள உயர் நீதி மன்றம் தீர்மானித்துள் ளது.

சுற்றாடல் நீதிக்கான மையம் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் சந்தியாகோ மாக்கஸ் அடிகளார் உள்ளிட்ட தரப்பினால் தாக்கல் செய்யப்பட்டு ள்ள குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுவா னது பிரதம நீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேன மற்றும் நீதியரசர் சம்பத் அபயகோன் ஆகியோர் அடங்கிய ஆயம் முன் னிலையில் நேற்று பரி சீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மன்றில் கருத்துரைத்த மனுதா ரர் தரப்பு சட்டத்தரணி கள்மன்னார் தீவை அண் மித்த பகுதிகளில் கனிய மண் அகழ்வுக்காக அனு மதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதா கத் தகவல்கள் கிடைத் துள்ளன.

குறித்த பகுதியில் இலங்கைக்கே உரித் தான அதிக பெறுமதி யான கனியவளம்காணப் படுகிறது. எவ்வித விலை மனு கோரல்களுமின்றி கனிய மண் அகழ்வுக் கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமை சட்ட விரோதச் செயல் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வாதங்களை பரிசீலித்த மன்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விட யங்களை உறுதிப்படுத் திக் கொள்வதற்காக, மனுவை எதிர்வரும் பெப் ரவரி 10 ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக்கொள் ளத் தீர்மானித்தது.

புவிசரிதவியல் மற் றும் சுரங்கப் பணியகம், அதன் பணிப்பாளர் நாய கம், கரையோரப் பாது காப்புத் திணைக்களம், மன்னார் மாவட்ட அர சாங்க அதிபர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சட்ட மாஅதிபர் உள்ளி ட்ட தரப்புகள் மனுவின் பிரதிவாதிகளாகப் பெய ரிடப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-7)

## எமது பிரச்சினைகளை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க பிறமொழி அறிவு அவசியம்

### ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

நாங்கள் எங்கள் கலா சாரத்தை, பண்பாட்டை, பிரச்சினையை மற்றை யவர்களுக்கு எடுத்துரை க்க வேண்டுமானால் அவர்களுடைய மொழி யினை நாம் அறிந்திரு ப்பது அவசியம்.

வினைத்திறனான அரச சேவையை முன் னெடுப்பதுக்கு மொழி முக்கியம். தாய் மொழி யான தமிழ் மொழிக்கு மேலதிகமாக நாங்கள் சிங்களம் மற்றும் ஆங் கிலத்தை கற்றிருப்பது எங்களுக்கு எப்போதுமே கைகொடுக்கும். ஏனைய மொழிகளை அறிந்திருந்தால் மக்க ளின் தேவையுணர்ந்து சிறப்பாக பணியாற்ற முடி யும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாய கன் தெரிவித்தார்.

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவ னம், வடக்கு மாகாண சபையுடன் இணைந்து மாகாண அரச உத்தி யோகத்தர்களுக்கு நடத் திய சிங்கள டிப்ளோமா கற்கை நெறியின் பட்ட மளிப்பு விழா வடக்கு மாகாண பிரதம செயலா ளர் அலுவலக கேட் போர் கூடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலே ஆளு நர் மேற்கண்டவாறு தெரி வித்தார். ஆளுநர் தனது உரையில் மேலும் தெரி வித்ததாவது ,

நாம் இன்னொரு மொழியைக் கற்பதன் ஊடாக எமது சேவையை வினைத்திறனாக்குவ துடன் மாத்திரமல்லாது தொடர்பாடல் இடை வெளியையும் குறைத் துக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் ஹிந்தி மொழி கற்பிக் கப்பட்டபோது சிலர் எதிர்ப்பு வெளியிட்டிருந் தார்கள். நாங்கள் இன் னொரு மொழியை அறிந் திருப்பதில் தவறேதும் இல்லை.

நம்மை நாம் வளர்த் துக் கொள்ள பிறமொழி அறிவு மிக அவசியம் என்றார். (ம-7)

## பலத்த மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை

(கொழும்பு)

பலத்த மின்னல் தாக் கம் குறித்து எச்சரிக்கை அறிக்கை ஒன்றை வளி மண்டலவியல் திணைக் களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி மன்னார், வவுனியா மாவட்டங்கள் உட்பட வடமத்திய, மத் திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகா ணங்களில் இடி, மின்ன லுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள் ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-7)

## நாடு திரும்பிய போதும் வீடு திரும்பாத மனைவி

### கணவன் பொலிஸில் முறைப்பாடு

வெளிநாட்டில் பணி புரிந்து நாட்டுக்குத் திரும் பிய நிலையில் இதுவரை யில் தனது மனைவி வீட் டிற்கு வரவில்லை என்று கணவன் மஸ்கெலியப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள் ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

மஸ்கெலியா - சாமி மலை ஓல்ட்டன் தோட்ட நிலாவத்தைப் பிரிவைச் சேர்ந்த மோகன் நிஷாந் தனி (வயது - 33) என்ற இரண்டு குழந்தைக ளின் தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்த நிலையில் குறி த்த பெண் இலங்கைக்கு கடந்த மாதம் (10.09. 2025) திரும்பி வந்த போதும் இன்று வரை தனது வீட்டிற்கு வர வில்லை என அவரது கணவர் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

அவரது முறைப்பாட் டில் கடந்த ஒரு மாதமாக தனது மனைவியைக் காணவில்லை என நாட் டின் பல பாகங்களில் தேடியும் அவர் கிடைக்க வில்லை எனவும் கண வர் தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட் டுக்கமைய துரித விசார ணைகளை ஆரம்பித்த தோடு பெண்ணின் புகைப் படத்தையும் வெளியிட் டுள்ள மஸ்கெலியப் பொலி ஸார் அவரைக் கண் டால் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்து க்கு 052 227 7222 என்ற இலக்கத்திற்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல் லது 075 359 1052 / 075 343 5012 என்ற இலக் கங்களுக்கோ தகவல் வழங்குமாறு அறிவித் துள்ளனர். (ம-7)

## இலங்கையுடனான உறவில் ஒழிவு மறைவு ஏதுமில்லை

### பிரான்ஸ் தூதுவர் உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கும் பிரா ன்ஸ்க்கும் இடையி லான உறவில் எதுவித மான இரகசிய நிகழ்ச்சி நிரல்களும் இல்லை என இலங்கைக்கான பிரா ன்ஸ் தூதுவர் ரெமி லம் பேர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ரெமி லம்பேர்ட்டுக்கும் மக்கள் விடுதலை முன்னணி யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தலை மையிலான குழுவினரு க்கும் இடையிலான சந் திப்பொன்று நேற்று (13) இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே பிரான்ஸ் தூது வர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

அநுர அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களை வெகுவாக பாராட்டிய துடன் அவற்றுக்கான தமது ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தினார்.

மேலும் ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர் களைப் பிரான்ஸ்க்கு உத்தியோகபூர்வ விஜ யம் மேற்கொள்ளுமாறு பிரான்ஸ் அரசாங்கத் தின் சார்பில் அழைப்பி னையும் விடுத்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி
### பகுதி VI

23

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம், தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கை அரச சபையின் கட்டமைப்பு:- மொத்த உறுப்பினர்கள் 61: சர்வசன வாக்குரிமை மூலம் 50 உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத சிறுபான்மையோரின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்காக 8 பேர்கள் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர். இதைவிட பதவி நிலை பெற்ற 3 பேர் - பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், சட்டத்துறை நாயகம் ஆகியோர் ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

### நிர்வாகக் குழு முறை

அரசுக் கழகத்துக்குச் சட்டமியற்றும் அதிகாரம் போலவே நிர்வாக அதிகாரங்களும் வழங்கப்பட்டிருந்தன. எனவே சட்டவாக்கக் கழகத்தின் 58 உறுப்பினர்களும் 7 நிர்வாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். அவை உள்நாட்டு அலுவல்கள், தொழில், கைத்தொழில், வர்த்தகம், விவசாயமும், காணியும், கல்வி, உள்ளூராட்சி, போக்குவரத்தும் பொது வேலைகளும் மற்றும் சுகாதாரம் என்பன வாகும்.

இந்த நிர்வாகக் குழுக்களின் தலைவர்கள் ஏழு பேரையும் உத்தியோகத்தர்களான பிரதம செயலாளர், சட்டச் செயலாளர், நிதிச் செயலாளர் மூவரையும் கொண்டதாக அமைச்சரவை அமைக்கப்பட்டது. அரச செயலாளர் மூவரையும் தவிர்ந்த ஏனைய அமைச்சர்களின் கீழ் திணைக்களங்கள் அமைக்கப்பட்டன. அரசுக் கழகத்தில் 3 அரச அதிகாரிகளுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

ஆளுநருக்கும் அரச செயலாளர்களுக்கும் அரசாங்க அதிகாரங்களும் முக்கியமான அமைச்சுப் பொறுப்புக்களும் வழங்கப்பட்டமையை இலங்கைத் தலைவர்கள் எதிர்த்தனர். அவர்கள் ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்குமாறும் அரச செயலாளர்களிடமிருந்த முக்கியமான அமைச்சுக்களை தேசியத் தலைவர்களிடம் ஒப்படைக்குமாறும் கோரி கிளர்ச்சி செய்தனர்.

### டொனமூர் அரசியலமைப்பின்படி தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்

75,000 இற்கு குறையாத 100,000 -125,000 இடைப்பட்ட மக்கள் தொகைக்கு ஒரு ஆசனம் எனும் அடிப்படையில் எல்லா (50) ஆசனங்களும் ஆட்புல / பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்வதற்கு 1930ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி ரொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இறுதியாக நடத்தப்பட்ட 1921 ஆம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்புக் கமைய (கிட்டத்தட்ட 4.5 மில்லியன் மக்கள்) நடவடிக்கையெடுப்பதென எல்லை நிர்ணய ஆணைக்குழு தீர்மானித்ததோடு 90,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆசனம் எனும் அடிப்படையில் 50 ஆசனங்களும் ஆட்புல / பிரதேச ரீதியில் எல்லை நிர்ணயம் செய்தது. மாகாணங்களின் எல்லைகளை அடிப்படையாகக்கொண்டே ஆசனங்கள் ஒதுக்கப்பட வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோளாகவிருந்தது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் எத்தனை ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன என்பதை கீழ் உள்ள உரு 1 காட்டுகின்றது.

50ஆவது ஆசனம், கணித முறையில் கூடுதலான (0.47) மீதியைக் கொண்ட வட மேல் மாகாணத்திற்கு ஒதுக்கப்படிருக்க வேண்டும். ஆனால் வன்னி மாவட்டம் சனத்தொகை குறைந்த பின் தங்கிய மாவட்டமாக இருந்ததால் அது வட மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்டதாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை 1930 மே மாதம் வெளியிடப்பட்டது (1930ம் ஆண்டின் SP XI அமர்வறிக்கை).

எல்லை நிர்ணய ஆணைக் குழு பொ[illegible]ந்து வாய்மொழி/எழுத்து மூல விடய முன் வைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு கண்டி, காலி, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், சிலாபம், அநுராதபுரம், பதுளை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தது குறிப்பிடத் தக்கதாகும்.


தமிழர்கள் வட மாகாணத்திற்கு 7 ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று எல்லை நிர்ணய ஆணைக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் அது எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

எல்லை நிர்ணயம் செய்வதற்கு மாகாணத்தின் பரப்பளவை கணக்கிலெடுக்காமல் சனத்தொகை விகிதாசாரத்தை மட்டும் கருத்தில் எடுத்தமை ரொபட் வில்லியம் லயனல் க்ரான்ட் எல்லை நிர்ணய ஆணைக் குழு தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்வதற்கு மாகாணத்தின் பரப்பளவை கணக்கிலெடுக்காமல் சனத்தொகை விகிதாசாரத்தை மட்டும் கருத்தில் எடுத்தது ஒரு குறைபாடாகச் சொல்லப்படுகிறது. உதாரணமாக இலங்கைப் பரப்பளவின் 5.6% ஐக் கொண்ட மேல் மாகாணத்திற்கு 28% மான ஆசனங்களும் இலங்கைப் பரப்பளவின் 15.9% ஐக் கொண்ட வட மத்திய மாகாணத்திற்கு 2% மான (ஒரு ஆசனம் மட்டும்) ஆசனங்கள் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது கவனிக்கத் தக்கதாகும்.

### தமிழ்ப் பிரதிநிதித்துவ விகித வீழ்ச்சி

மேலும் இவ்வெல்லை நிர்ணயத்தின் படி இது வரையில் தமிழர் - சிங்களவருக்கிடையே இருந்த பிரதிநிதித்துவ விகிதம் 1:2 லிருந்து 1:5 ஆக மாறியது. இது தமிழர்களுக்கு அரசியலில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியது.

கீழே படத்தில் காட்டியவாறு வடமாகாணத்திற்கு கிடைத்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 5 ஆகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரயில் மோதி...

வடக்கு பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த யாழ்தேவி ரயிலுடன், கடவையைக் கடக்க முற்பட்ட முச்சக்கரவண்டி மோதுண்டதில் இவ் அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மோ.சைக்கிள்...

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த உதைபந்தாட்ட நடுவரான யூட் (வயது-27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

விபத்தில் முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி வயலுக்குள் பாய்ந்துள்ளது.

இதுதொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,33,316)

## இலங்கை ஆசிரி...

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் வடமாகாண கல்வித் திணைக்களத்துக்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும் தற்போது உள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் பாகுபாடு மற்றும் பழிவாங்கல் காணப்படுவதுடன் தற்போதுள்ள அரசாங்கத்தின் கீழ் சில அதிகாரிகள் அவர்களின் சுயலாபத்துக்காகச' செயற்பட்டு கொண்டு உள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை என்றும், அந்த இடமாற்றங்களில் பல குறைபாடுகள் உள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் சுட்டிக்காட்டினர். (ம-7,33)

## வடக்கு மாகாண...

வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமக்கு இடமாற்றம் வழங்கக்கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை குறித்த போராட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் பணியாற்றுகின்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெளி மாவட்ட சேவைக் காலத்தை நிறைவு செய்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், சரியான பொறிமுறையின் கீழ் இதுவரை இடமாற்றம் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநரை மூவர் அடங்கிய குழுவினர் சந்தித்து தமது பிரச்சினைகளைத் தெரியப்படுத்தினர்.

தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ்.மாவட்ட செயலரைச் சந்தித்து கலந்துரையாடியதோடு மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ம-7,33,104)

## இனந்தெரியாத...

அதிகாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த குழு வீட்டின் முற்றத்தில் நிறுத்தப்பட்டிருந்த முச்சக்கரவண்டிக்கு மண்ணெண்ணெய் ஊற்றி அதற்குத் தீ வைத்தது. மேலும் அதே இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் வீட்டிலிருந்து எடுத்துச் சென்று சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள மல்லாகம் வீதி, மாசியப்பிட்டி சந்தி வீதியின் நடுவில் தீ வைத்து எரித்தது.

இது குறித்து மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## சங்குப்பிட்டியில்...

திப்படுத்தப்பட்டுள்ளது.

வேலணை துறையூரைப் பிறப்பிடமாகவும் காரைநகர் காரைப்புரியல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேஸ்குமார் குலதீபா (வயது-36) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண் கடந்த சனிக்கிழமை நண்பிகளுடன் வவுனியா சென்று வருவதாகக் கூறி வீட்டை விட்டு வெளியே சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த பெண்ணின் சடலம் நேற்று (13) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில், சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன் முன்னிலையில் உடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது அந்தப் பெண் படுகொலை செய்யப்பட்டது உறுதியாகியுள்ளது.

அந்தப் பெண்ணின் தலையில் குத்தப்பட்டு, முகம் உள்ளிட்ட உடல் பகுதிகளில் எரியக் கூடிய திரவம் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டு, கடலில் வீசப்பட்டுள்ளார். அவரது நுரையீரலில் நீர் புகுந்து, மூச்சுத் திணறலால் உயிரிழந்தமை உடற்கூறாய்வில் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் வீட்டை விட்டுப் புறப்படும்போது 10 பவுண் நகை அணிந்திருந்தார். ஆனால், அவரது சடலத்தில் நகைகள் எதுவும் காணப்படவில்லை.

அவர் வீட்டை விட்டுப் புறப்படும் போது, தனது நண்பியுடன் வவுனியா செல்வதாகக் கூறியிருந்தார்.

எனினும், இதுவரை நடத்தப்பட்ட விசாரணையின்படி, அந்தப் பெண்தனது கணவனிடம் கூறிய வருடன் சென்றதாகத் தெரியவில்லை என பொலிஸ் தரப்பு விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்தப் பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானதாகச் செய்திகள் வெளியான போதும், உடற்கூறாய்வில் அது உறுதிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

## குற்றச் செயல்...

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ண தெரிவித்தார்.

ஐஸ் ரக போதைப்பொருள், கஞ்சா, கசிப்பு மற்றும் சட்டவிரோத மண் அகழ்வு உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 5981
A 7 1 6 6 9 4
அத சம்பத
A 6 6 9 4
சீட்டிழுப்பு இலக்கம் 0556

சுப தவசக்
திகதி 2025.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 0097
மிதுனம் 04 06 30 43

தன நிதானய
திகதி - 2025.10.13
சீட்டிழுப்பு இலக்கம் - 2011
Z 07 10 24 62 Z

மெகா பவர்
திகதி 13/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2328
E 18 27 36 39 70

ஜய
திகதி 2025.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 0249
T 0 1 5 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4223
சீட்டிழுப்பு திகதி 13.10.2025
O 18 58 59 71
O

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 1290
மிதுனம் 10 38 54 60 மிதுனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
13.10.2025 வெற்றி வாரம் 0689
V 3 1 0 8 3 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,314,640.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2955
சீட்டிழுப்பு திகதி 2025.10.13 தினம் திங்கட்கிழமை
29 54 55 75 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,943,879.20

சனிதா
திகதி 13.10.2025 வெற்றி வாரம் 5116
19 25 53 58 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,964,697.60

ஜயோதா Jayoda
திகதி 2025.10.13 வெற்றி வாரம் 2169
18 21 26 37 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 32,172,996.40

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4667
சீட்டிழுப்பு திகதி 13.10.2025 தினம் திங்கட்கிழமை
02 03 37 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,326,071.60

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
L 25 34 38 46 52
2131
13.10.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.599,928,266.80

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2781
சீட்டிழுப்பு திகதி: 2025.10.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,666,318.40
03 06 21 28 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னந்தோப்பில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள் மடம் தென்னந்தோப்பிலிருந்து ஆணின் சடலம் ஒன்று நேற்று (13) மீட்கப்பட்டதாகக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் குருக்கள் மடம் கிராமத்தைச் சேர்ந்த 81 வயதுடைய கதிர்காமத்தம்பி சோமசுந்தரம் என அடையாம் காணப்பட்டுள்ளார்.

குருக்கள்மடம் தென்னந் தோப்பில் ஆண் ஒருவரின் சடலம் கிடப்பதாக அப்பகுதி மக்கள் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கமைய குறித்த பகுதிக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.பிரதீபனின் உத்தரவுக்கமைய அங்கு விஜயம் செய்த களுவாஞ்சிக்குடிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ம-7)

## செம்மணி...

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்றபோது குறித்த விடயம் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி பூரணி,

கடந்த இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நிறுத்தப்பட்டதிலிருந்து இன்று வரையான காலப்பகுதி வரை சட்டவைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா அவர்களால் ஒவ்வொரு கிழமையும் கண்காணிக்கப்பட்டு வந்தது.

அத்துடன் சி.ஐ.டி சார்ந்த துறையினரால் தினமும் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. அதற்கு மேலதிகமாக நேற்று நீதவான் உள்ளிட்ட குழுவினரால் இந்த இடம் எவ்வாறு விட்டுச் செல்லப்பட்டதோ அவ்வாறு இன்று வரை காணப்படுவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து சட்டவைத்திய அதிகாரி பிரணவன் செல்லையா அவர்களால் புதைகுழி அகழ்வுக்கு கோரப்பட்ட நிதி குறித்த அமைச்சால் அனுமதிக்கப்பட்டு அகழ்வுப்பணியைத் தொடர குறித்த தொகை எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று (நேற்று) குறித்த இடத்தைப் பார்வையிட்ட போது இந்த இடம் ஒரு களிமண் தரையாகக் காணப்படுகின்றது.

தொடர்ச்சியாக மழை பெய்யுமாக இருந்தால் இந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்வது மிகவும் சிரமமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை முறைப்பாட்டாளர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த இடம் வெள்ளநீர் தேங்கி நிற்கும் ஒரு பகுதியாகக் காணப்படுகின்றது. ஆகவே இந்த வழக்கு மீண்டும் திறந்த நீதிமன்றத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அன்றைய தினமும் இந்தக் கள விஜயம் இடம்பெறும். அப்போது இந்த இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப் பொருத்தமாக இருந்தால் அகழ்வுப் பணிகள் ஆரம்பிப்பது தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்.

மீட்கப்பட்ட எலும்புக்கூட்டு மாதிரிகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்த நிபுணர்கள் ஏற்கனவே நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் பெயர்குறிக்கப்பட்ட நிபுணர்கள் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவது தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரியால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய அதனைப் பரிசீலிப்பதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குறித்த இடம் தொடர்பாகவும் குறித்த வழக்குத் தொடர்பாகவும் யாருக்காவது ஏதேனும் முறைப்பாடுகள் தெரிவிக்க இருந்தால் நகர்த்தல் பத்திரத்தை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றிற்கு அனுப்பி தங்கள் சார்பான விடயத்தை தெரியப்படுத்தலாம் எனவும் நீதவானால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (ம-7,33)

## 5 மணி நேரம்...

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று (13) காலை இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவில் முன்னிலையானார்.

சுமார் ஐந்து மணி நேரம் நீடித்த வாக்குமூலத்தை வழங்கிய பின்னர் முன்னாள் ஜனாதிபதி பிற்பகல் 2.00 மணியளவில் ஆணைக்குழுவிலிருந்து வெளியேறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்த ஒரு நிறுவனத்தில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக வாக்குமூலம் அளிக்க முன்னாள் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## தருமபுரத்தில்...

நேற்றுத் துப்பரவு பணி செய்த பொழுது வெடிக்காத நிலையில் கைக் குண்டு ஒன்று இனங்காணப்பட்டது.

இது தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த தருமபுரம் பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்ற அனுமதியுடன் அப்பகுதியில் இருந்து குண்டினை பாதுகாப்பாக அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ம-7,316)

## பொலிஸாரின்...

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு இன்னும் ஓரிரு வாரத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பொலிஸாரை பயன்படுத்தி தையிட்டியில் இவ்வாறான நிகழ்வு இடம்பெறுவதாக தையிட்டி காணி உரிமையாளர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொலிஸார் விழாவை முன்னின்று ஏற்பாடு செய்கின்றமை ஏற்கக் கூடியது அல்ல என்றும் தெரிவித்தனர். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4102)
076 825 7716 (ஆகாஸ்)

## மரண அறிவித்தல்

### நாகநாதன் மகாநாதன்

(முன்னாள் கணித ஆசிரிய ஆலோசகர் – யாழ்.வலயம் மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான் – நல்லூர்)

பிறப்பு 08.10.1950 — இறப்பு 12.10.2025

பிரம்படியைப் பிறப்பிடமாகவும் 393/16, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதன் மகாநாதன் (மகான்) அவர்கள் கடந்த (12.10.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.10.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

393/16, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்

வானதி - 074 011 5365, கௌரங்கன் - 076 284 1597
சுமந்திரன் (இந்து) - 077 715 0863 (5652)

காயத்திரி திருமண சேவை
சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.
உணவகம் ஒன்றிற்கு சமையல் ஆள் தேவை.
உரும்பிராய்
077 844 9861, 076 314 4689 (5644)

### யா/வடமராட்சி இந்து ஆரம்ப பாடசாலை தம்பசிட்டிவீதி, பருத்தித்துறை.

### பொதுக்கூட்டம் – 2025

காலம் : 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப 9.00 மணி
இடம் : பாடசாலை பிரதான மண்டபம்

மேற்படி நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்கு அனைத்து பழைய மாணவர்களும் தவறாது குறித்த நேரத்திற்கு வருகை தந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி
தலைவர்
(C-4103)



### கண்ணீர் அஞ்சலி

தொண்டைமானாறு வெளிக்கள நிலைய நிர்வாக சபை உறுப்பினர்
அன்பும் பண்பும் கணித ஆற்றலும் அறிவும்மிக்க

அமரர் நாகநாதன் மகாநாதன்

அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் மன அமைதிக்காக இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும் -
வெளிகள நிலையம்
(தொண்டைமானாறு)
(C-4099)

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் 30,000/- 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com (C-4101)

வேலையாள் தேவை
ஒரு மாதக் குழந்தையைப் பராமரிப்பதற்குப் பெண் வேலையாள் தேவை.
40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 075 979 5012 (C-4106)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org